# நம்வழி வேளாண்மை

பருவம் 33 | அக்டோபர் –டிசம்பர் 2024 | இதழ் : 3, 4

ஜனவரி 2025 – மார்ச் 2025




**21 வது கால்நடை கணக்கெடுப்பில் பட்டிமேய்ச்சல் செய்வோரை (கிடைக்காரர்கள்) சேர்த்துக் கொள்ளுதல், இடம் : வேலாம்பட்டி.**

*இயற்கைவழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம்வழி வேளாண்மை

பருவம் 33 அக்டோபர் – டிசம்பர் 2024 இதழ் 3,4

ஜனவரி 2025 – மார்ச் 2025



ஆசிரியர்

**பெ. விவேகானந்தன்**


தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.


**நம்வழி வேளாண்மை குழுமம்**

**பிற மொழி இதழ்கள்**

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே



**நம் வழி வேளாண்மை**

45, டி.பி.எம். நகர்,

விராட்டிபத்து, மதுரை – 625 016.

தொலைபேசி : 0452– 2380082

இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta,

**Honey Bee,**

SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org


## பசுக்களும் கிராம வாழ்வும்

பிரம்மா முதலில் பசுக்களையும், அந்தணர்களையும் படைத்தார். ஏனெனில் வேள்விகள் செய்வதற்கு நெய்யும், வேதம் ஒதுவதற்கு அந்தணர்களும் தேவையானதால்தான் என்று புராணங்களில் கூறப்படுகின்றது.

எந்த கிராமத்தில் குறைந்தது 100 பசுக்கள் சுதந்திரமாகப் பராமரிக்கப்படுகிறதோ அங்கு மும்மாரி மழைபொழியும் என்றும் கூறப்படுகிறது.

சேவா மூலம் பாரம்பரிய கால்நடை இனங்களை பராமரிப்போருக்கு ஆண்டுதோறும் கால்நடை இனப்பாதுகாவலர் விருது வழங்கி வந்தோம். இதில் rhÏ thš ïd¥gRÉ%F "நாம்தாரி" எனக்கூறப்படும் பஞ்சாப் மாநில சீக்கிய சமூகத்தின் சார்பாக 2012ல் நாம்தாரி சங்கத்திற்கு விருது வழங்கப்பட்டது. இச்சங்கத்தின் தலைவர் ஜஹிர்சிங் கின் அழைப்பின்பேரில் 2016ல் சண்டிகார் நகருக்கு அருகே உள்ள "பானிசாஹிப்" என்ற நாம்தாரி சீக்கியர்கள் தங்கும் கிராமத்திற்கு சென்றிருந்தேன். அவ்வூரில் சுமார் 200 வீடுகள் உள்ளன. அங்கு கீழ்க்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்படுவதை பார்த்து மனம் பூரித்தேன்.

1. ஊரில் யாரும் மது, சாராயம் அருந்துதல், புகைபிடித்தல் கூடாது. ஆனால் 2 கி.மீ. தள்ளி குடித்தால் பிரச்சனையில்லை.

2. வெளியூர்க்காரர்கள் யார் வந்தாலும் உண்ண உணவும், தங்க இடமும் பொது சத்திரத்தில் இலவசமாக வழங்கப்படும்.

3. இவ்வூரில் பசுமாடுகள் தவறிச் சென்று விவசாயிகளின் தோட்டங்களில் புகுந்து வெள்ளாமையில் மேய்ந்து விட்டால் மாட்டை அடித்து துன்புறுத்தக்கூடாது. ஆனால் மாட்டை மெதுவாக அதட்டி பத்தி விடலாம். பசுமாடுகளை இறக்கும் வரை வைத்திருந்து இறந்த பின் புதைத்து விடுகின்றனர். அதாவது வயதான காலத்தில் பசுக்களை அடிமாடுகளுக்கு அனுப்புவது கிடையாது. இந்த ஊரில் ஒரு நாள் தங்கியிருந்தேன். இரவில் கனவில் ஊரை கருமேகம் சூழ்ந்து மழை பெய்யும் தருணத்தில் இருந்ததை பார்த்து மகிழ்ந்தேன். பின் விழித்துக் கொண்டேன். இது போன்று நாடெங்கும் கிராமங்கள் செயல்பட்டால் இதுவே நம் முன்னேற்றம். பசுக்கள் மூலம் இயற்கை வேளாண்மையும் உத்வேகம் பெறும்.

– ஆசிரியர்

# 21வது கால்நடை கணக்கெடுப்பில் பட்டிமேய்ச்சல் செய்வோரை (கிடைக்காரர்கள்) சேர்த்துக் கொள்ளுதல்

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கால்நடை கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்தி வருகிறது. தற்போது 21–வது கால்நடை கணக்கெடுப்பில் முதல் முறையாக பாரம்பரிய மேய்ச்சலில் அல்லது பட்டிகளில் மேய்க்கப்படும் கால்நடைகளையும் கணக்கெடுக்க மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பாரம்பரிய மேய்ச்சல் தொழிலில் யாதவர் (கோனார்), குறும்பக்கவுண்டர், தோடர், முத்தரையர், வன்னியர், மறவர், அகமுடையர், கள்ளர், கம்பளத்து நாயக்கர், ஒக்கலிக கவுண்டர், லிங்காயத், நாடார், தேவேந்திர குல வேளாளர், அருந்ததியர், பறையர், இசுலாமியர் ஆகியோருடன் நிலமற்ற பலதரப்பினரும் மேய்ச்சல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களிடம் புலிக்குளம், காங்கேயம், உம்பளச்சேரி, பர்கூர், ஆலம்பாடி மாடுகளும்; பர்கூர் மற்றும் தோடா எருமைகளும்; செம்மறியாட்டு இனங்களான கச்சைகட்டி கருப்பு, பட்டணம், ராம்நாடு வெள்ளை, கீழக்கரிசல், மேச்சேரி, கோயம்புத்தூர் செவ்வாடு, வெம்பூர், நீலகிரி ஆடு, திருச்சி கருப்பு, சென்னை சிவப்பு போன்ற இனங்களும் உள்ளன.

மேய்ச்சல் சமூக மக்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் கால்நடைப் பொருள்களை லட்சக்கணக்கான மக்களுக்கு தமிழகம் முழுவதும் கொடுத்து வருகிறார்கள். மேய்ச்சலில் ஈடுபடுத்தப்படும் கால்நடைகள் உபயோகமற்ற நிலத்தில் வளரும் புல் மற்றும் தாவரங்களை உண்டு வாழ்வதோடு, மனிதர்களுக்கு தேவையான மலிவான, சுத்தமான, புரதச்சத்து நிறைந்த உணவாகவும் மாற்றுகின்றன. இவ்வாறாக மேய்ச்சல் சமூகத்தினர் பங்களிப்பு சத்தான உணவிற்கும், இயற்கை உரத்திற்கும் உதவுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் 'மேய்ச்சல் நிலங்கள் மற்றும் கிடைக்காரர்கள் சர்வதேச ஆண்டு – 2026'ஆம் ஆண்டை அறிவித்துள்ளது. மேய்ச்சலிற்கும் இந்த சர்வதேச ஆண்டு கொள்கையாக கொண்டுள்ளது.

மேய்ச்சல் சமூகத்தினர் பல்லுயிர் பெருக்கத்தை அதிகரிப்பதிலும், சுற்றுச்சூழலுக்கு உதவும் வகையிலும், கார்பன் வெளிபாட்டை குறைப்பதிலும், நீர்நிலைகளை பாதுகாப்பதிலும் முக்கிய பங்காற்றுகிறார்கள்.

இந்நிலையில், தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்புத்துறை 21–வது கால்நடை கணக்கெடுப்பை தமிழ்நாடு முழுவதும் அக்டோபர் 2024 முதல் ஜனவரி 2025 வரை நடத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறது. வீட்டில் வளர்க்கப்படும் கால்நடைகள் ஆடு, மாடு, எருமை, வாத்து, கழுதை, கோழி, பன்றி போன்றவைகளோடு, ஊர் விட்டு ஊர் சென்று மந்தை அல்லது கிடைகளில் அல்லது பட்டிகளில் பாரம்பரிய மேய்ச்சலில் ஈடுபடுத்தப்படும் நாட்டின் கால்நடைகளையும் கணக்கெடுத்து வருகிறார்கள்.

கால்நடை கணக்கெடுப்பில் பட்டிமேய்ச்சலில் ஈடுபடுவோர் (கிடைக்காரர்கள்) யார் யார் என்பது தெளிவாக குறிக்கப்பட்டுள்ளது. இதன்படி கடந்த ஐந்து ஆண்டுகளில் வருடத்தில் ஒரு மாதமாவது வெளியூருக்கு கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்திருக்க வேண்டும். இரண்டாவது இவர்கள் அரசு பொது நிலங்கள், வனப்பகுதி, காடுகள் இவற்றில் தங்களது கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்தியிருக்கவேண்டும். மூன்றாவது பாரம்பரிய மேய்ச்சல் தொழிலாக கால்நடைகளை மந்தை அல்லது கிடைகளில் வைத்து பராமரித்து வந்திருக்க வேண்டும். மேற்கண்ட மூன்று பிரிவுகளில் ஏதாவது இரண்டு பிரிவுகளில் இவர்கள் வருவார்கள் என்றால் இவர்களை நாம் பட்டிமேய்ச்சல் செய்வோராக (கிடைக்காரர்கள்) சேர்த்துக் கொள்ளலாம். கால்நடை வளர்ப்போர் மற்றும் பட்டிமேய்ச்சல் செய்வோர் கால்நடை கணக்கெடுப்பில் தங்களது முழு விவரங்களை விடுபடாமல் அந்தந்த பகுதிகளில் உள்ள கால்நடைத்துறை அதிகாரிகளிடம் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். – விவேகானந்தன்

**நெல்வயலில் நேரடி நெல் விதைக்கும் கருவி:** தஞ்சாவூர் மாரியம்மன் கோவில் மேலத்தெரு திரு. ரமேஷ் இந்த கருவியை உருவாக்கியுள்ளார். இதனுடைய விலை ரூ. 25,000 ஆகும். இது வரை 7 நபர்கள் செய்ய கொடுத்துள்ளார். இதனை கையில் அல்லது புல் வெட்டும் மிஷினில் இயக்கலாம்.

ரமேஷ், தஞ்சாவூர், செல் :9514694286

## சுசீந்தரின் இயற்கை வேளாண்மையும், கண்டுபிடிப்புகளும்




கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலத்தில் சுசீந்தர் கடந்த 10 ஆண்டுகளாக இயற்கை வேளாண்மை செய்து வருகிறார். இப்பகுதியில் ஏரிப்பாசனம் மூலம் ஒரு போக நெல் சம்பா பட்டத்தில் பயிரிடப்படுகிறது. ஆவணி மாதத்தில் விதைப்பு செய்யப்பட்டு தை மாதத்தில் அறுவடை செய்வர்.

கோடையில் புழுதியில் ஓர் உழவு டிராக்டர் கொண்டு (கொக்கி கலப்பை) செய்வர். இதற்கு ஏக்கருக்கு ரூ. 1200 செலவாகும். இதனால் வெள்ளாமை செய்யப்படும் சமயம் களை முளைக்காது. வேர் புழுக்களும் கட்டுப்படும். உழும் சமயம் மேலே எழும்பும் புழுக்களை பறவைகள் உண்ணும். ஆவணி மாதத்தில் ஏரி தண்ணீர் மூலம் நாற்றங்கால் தயார் செய்வர். ஒரு ஏக்கருக்கு 3 சென்ட் நிலத்தில் முளைகட்டிய நெல் விதைகளை விதைப்பர். விதைத்த 4 வது நாளில் நீரை வடித்துவிட வேண்டும். 10வது நாளில் நன்கு முளைத்து விடும். அப்போது வேப்பம்புண்ணாக்கு 1 கிலோ, கடலைப்புண்ணாக்கு 5 கிலோ, எள்ளுப் புண்ணாக்கு 5 கிலோ அனைத்தையும் அரைத்த கலவையை நாற்றங்காலில் உரமாகத் தர வேண்டும். நாற்றங்காலில் நோய், பூச்சி தடுக்க இஞ்சி 1 கிலோ, பூண்டு 1 கிலோ, மிளகாய் 1 கிலோ தனித்தனியாக அரைத்து ஒன்று சேர்த்து 1 லிட்டர் நீரில் கலந்து கொள்ள வேண்டும். இந்த கரைசலிலிருந்து 500 மி.லி எடுத்து 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். நெல் நாற்றங்காலை நெல் நடவு செய்த 25 நாட்களில் பிடிங்கி நடவு செய்ய வேண்டும். நடவு செய்யப்படும் வயலை பெரிய டிராக்டர் கொண்டு உழவு செய்ய வேண்டும். சின்ன டிராக்டர் கொண்டு சமன் செய்து வரிசை நடவு செய்ய வேண்டும். நடவு செய்யும் முன் பசுந்தாள் உரச்செடிகளை மண்ணில் அமிழ்த்தி 2–3 நாட்களுக்கு பின்னர் நடவு செய்ய வேண்டும். இடைவெளி 1 அடிக்கு 1 அடி ஒவ்வொரு பயிருக்கும் மற்றும் வரிசைக்கும் விட வேண்டும்.

நடவு செய்த 3 வது நாளில் எள்ளுப்புண்ணாக்கு 10 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ இடித்து தூள் செய்து நிலத்தில் நீரை வடித்த பின் இட வேண்டும்.

நெற்பயிர் நட்ட 15வது நாட்களுக்குள் இரு முறை களையெடுக்கும் கருவியின் மூலம் கிழக்கு மேற்கு முகமாகவும். வடக்கு தெற்கு முகமாகவும் கருவி கொண்டு இழுக்க வேண்டும். இதனால் களையும், பூச்சியும் மடிந்து விடும். நட்ட 30வது நாளில் ஆள் வைத்து களையெடுக்க வேண்டும். 10வது நாளில் ஒரு தடவை புளித்த அரிசி கஞ்சியை நீரில் கலந்து விட வேண்டும். (அரிசி குருணை கொண்டு கஞ்சி தயார் செய்ய வேண்டும். இத்துடன் வெல்லம் 2 கிலோ சேர்த்து 3 நாட்கள் புளிக்க விட வேண்டும்). நெல் பூ வெடுக்கும் சமயம் அரப்புக் கரைசல் தெளிக்க வேண்டும். அரப்புக்கரைசல் தயார் செய்ய உசிலை இலை 1 கிலோ, புளித்த மோர் 5 லிட்டர், 1 தேங்காய் துருவி எடுத்த பால் அனைத்தும் சேர்த்து ஒரு வாரம் புளிக்க விட வேண்டும். இதிலிருந்து 1 லிட்டர் எடுத்து 10 லிட்டர் தண்ணீரில் கலந்து பூபூக்கும் சமயம் ஒரு முறை தெளிக்க வேண்டும். பூச்சி நோய் இருந்தால் வேப்ப எண்ணெய் கரைசலை (வேப்ப எண்ணெய் 1/2 லிட்டர் + காதி சோப்பு) நிலத்திற்கு தெளிக்கலாம் அல்லது களையெடுக்கும் கருவியின் குழாயில் ஊற்றலாம். தண்டு துளைப்பான், கதிர் நாவாய் பூச்சிக்கு இஞ்சி, பூண்டு, மிளகாய் கரைசல் (மேற் சொன்ன முறைப்படி தயாரித்து) தெளிக்க வேண்டும். இயற்கை வேளாண்மையில் கருப்புகௌணி நெல் ஏக்கருக்கு 16 மூட்டைகள் கிடைக்கிறது. ஒரு மூட்டை நெல் ரூ. 3000லிருந்து 8000 வரை விற்பனை ஆகிறது.

**பல்நோக்கு களையெடுக்கும் கருவியை உருவாக்கிய திரு. சுசீந்தரனுக்குப்பரிசு**



28.12.2024 அன்று அஹமதாபாத்தில் இந்திய மேலாண்மை நிறுவனத்தில் (Indian Institue of Management, Ahmedabad) நடைபெற்ற கண்டுபிடிப்புகள் கண்காட்சியில் திரு. சுசீந்தருக்கு 3வது பரிசும், ரொக்கம் ரூ. 20,000 கிடைத்தது. இவருடைய களையெடுக்கும் கருவியில் இயற்கை திரவ உரம், மூலிகை பூச்சிகொல்லி மருந்துக்கரைசல் கலந்து பயன்படுத்தலாம். இந்த கருவியை தயாரிக்க வெறும் ரூ. 1000 மட்டுமே செலவாகும்.

சுசீந்தர், எண்: 83, தெற்குத்தெரு,
பெண்ணாடம் சாலை, விருத்தாசலம் – 606001
கடலூர் மாவட்டம். செல் : 9952637722

## செல்லமுத்துவின் இயற்கை வேளாண்மை தயாரிப்புகள்

ஈரோடு மாவட்டம், கொடுமுடி தாலுகா, ஊஞ்சலூர் அருகே உள்ள கருக்கம்பாளையம் கிராமத்தில் கடந்த 24 ஆண்டுகளுக்கு மேல் பஞ்சகவ்யா, மூலிகை பூச்சிவிரட்டி, மீன் அமிலக்கரைசல் போன்றன விநியோகித்து வருகிறார். ஒரு லிட்டர் பஞ்சகவ்யா ரூ. 150, மூலிகை பூச்சி விரட்டி ரூ. 140, மீன்அமிலக்கரைசல் ரூ. 300 ஒரு லிட்டருக்கு என கொடுத்து வருகிறார். இதனை வைத்துக்கொண்டு எந்த ஒரு விவசாயியும் இரசாயன இடுபொருள்களை பயிர்களுக்கு தவிர்த்து விடலாம். இவருடைய அனுபவப்படி பயிர் விதைத்த அல்லது நட்ட 20 நாட்களில் மீன் அமிலக்கரைசல் 2 லிட்டர் கரைசலை 200 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு தெளிக்கலாம் அல்லது 3 லிட்டர் மீன் அமிலக்கரைசலை வாய்க்கால் நீரில் கலந்து விடலாம். பின்னர் 30வது நாளில் ஏழுவகை புண்ணாக்கு கரைசல் கொடுக்கலாம்.

ஆமணக்கு புண்ணாக்கு, தேங்காய் புண்ணாக்கு, வேப்பம் புண்ணாக்கு, எள்ளுப்புண்ணாக்கு, கடலை புண்ணாக்கு, புங்கம் புண்ணாக்கு, இலுப்பை புண்ணாக்கு. இந்த 7 வகை புண்ணாக்கு ஒன்றாக சேர்த்து இதிலிருந்து ஒரு கிலோ எடுத்து 20 லிட்டர் மாட்டு கோமியத்தில் ஊற வைக்க வேண்டும். இதில் 2 கிலோ நாட்டு வெல்லம் சேர்த்து 10 நாட்கள் புளிக்க விட வேண்டும். இந்த புளித்த கரைசலில் இருந்து 500 மி.லி. எடுத்து 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது பாசனநீரில் விடலாம். இது பயிருக்கு உரமாகவும் பூச்சி நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியையும் கொடுக்கிறது.

புண்ணாக்கு கரைசலை விவசாயிகளே தயாரித்து பயன்படுத்தலாம். சில விவசாயிகள் இதையும் தயார் செய்து வழங்குவதற்கு என்னிடம் கேட்டு வருகின்றனர்.

தென்னை மரங்களுக்கு மீன் அமிலக்கரைசல் 100 மி.லி. 10 லிட்டர் நீரில் கலந்து வேர் பகுதியில் ஊற்றி விட வேண்டும். இதனால் மரங்கள் நன்கு காய்க்கும். மூலிகை பூச்சிக்கொல்லி மருந்து 10 லிட்டர் நீருக்கு 700 மி.லி வீதம் பயிருக்கு தெளிக்க வேண்டும். பஞ்சகவ்யாவை தெளிக்கும் சமயம் ஓர் ஏக்கருக்கு 1 1/2 லிட்டர் கரைசல் போதுமானது. அதாவது 10 லிட்டர் நீருக்கு 150 மி.லி. கலந்து தெளிக்க வேண்டும். பஞ்சகவ்யாவை வாய்க்கால் நீரில் கலந்து விடும் சமயம் ஓர் ஏக்கருக்கு 20 லிட்டர் பஞ்சகவ்யா தேவைப்படும்.

செல்லமுத்து, கருக்கம்பாளையம், கொடுமுடி தாலுகா
ஊஞ்சலூர் வழி, ஈரோடு மாவட்டம்.
செல் : 9486602389

## பனையம்மாளின் கால்நடை வைத்யம்



மதுரை மாவட்டம் பாலமேடுக்கு அருகில் உள்ள இச்சிகுளம் கிராமத்தில் பனையம்மாள் மற்றும் இவருடைய உறவினர்கள் பலர் சிறுமலை அடிவாரத்தில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு மூலிகை வைத்யம் பற்றிய அறிவு முழுமையாக தெரிந்து வைத்துள்ளனர். அவ்வப்போது வைத்யத்திற்கு தேவைப்படும் மூலிகைச் செடிகளை விநியோகித்து வருகின்றனர். பனையம்மாளினுடைய கால்நடை மூலிகை வைத்ய அனுபவங்கள் ஏற்கனவே நம் வழி வேளாண்மை இதழில் பிரசுரித்துள்ளோம். இவர் மேலும் கூறும் சில விபரங்கள் பின்வருமாறு :

**மாடுகளின் கட்டிகளுக்கு**

கொல்லங்கோவை கிழங்கு எடுத்து இத்துடன் புழுங்கலரிசி சேர்த்து அரைத்து கட்டிகளின் மேல் தடவி விட வேண்டும்.

**விஷக்கடிக்கு**

சிறியாநங்கை ஒரு கைப்பிடி அளவு, கொல்லங்கோவை கிழங்கு 100 கிராம் சேர்த்து அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**வயிற்றுப்பொருமலுக்கு**

சிறுசின்னிதழை ஒரு கைப்பிடி அளவு, உப்பு 10 கிராம் சேர்த்து அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**இரத்தக்கழிச்சலுக்கு**

வில்வஇலை, வீலிஇலை ஒவ்வொன்றும் ஒரு கைப்பிடி அளவு சேர்த்து அரைத்து உள்ளே தர வேண்டும்.

**மடி நோய் அல்லது பால் திரளாக வந்தால்**

எலுமிச்சம் பழம் 4, வாழைப்பழம் 2, வில்வஇலை ஒரு கைப்பிடி அளவு அனைத்தையும் பிசைந்து உள்ளே தர வேண்டும்.

**பாலில் கொழுப்பு சத்து கூட**

எள்ளுப்புண்ணாக்கு நீரில் கலந்து குடிக்க உள்ளே தர வேண்டும் அல்லது சுரைக்காய், தேங்காய் அரைத்து உள்ளே தர வேண்டும்.

பனையம்மாள், இச்சிகுளம், சல்லிகோடாங்கிபட்டி வழி, பாலமேடு. மதுரை மாவட்டம்.

## கால்நடை மூலிகை வைத்ய செயலி

டெல்லியிலுள்ள ISDM நிறுவனத்துடன் இணைந்து கால்நடை மூலிகை வைத்ய செயலி ஒன்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இந்தச் செயலி முலம் தமிழ், ஆங்கிலத்தில் பேசினாலோ அல்லது டைப்பிங் செய்தாலோ கால்நடைகளின் பிரச்சனைகளுக்கு மூலிகை வைத்ய முறைகள் உடனுக்குடன் பேச்சிலும், எழுத்திலும் வந்துவிடும். இது இன்னும் முழுமையடையவில்லை. இருப்பினும் தங்களது மேலான கருத்துக்களை தெரியப்படுத்த வேண்டுகிறோம்.

இதற்கான இணைப்பு முகவரி கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

**www.livestockseva.org**

## சர்க்கரை சத்திற்கு உகந்த நெல் ரகம்



தஞ்சாவூர் மாவட்டம், மாரியம்மன் கோவில் அருகே கத்தரிநத்தம் ஊரில் திரு. செந்தில்குமார் கடந்த 3 வருடங்களாக இயற்கை வேளாண்மை முறையில் பாரம்பரிய மணிசம்பா நெல்ரகத்தை பயிர் செய்து வருகிறார். இந்த நெல் ரகம் ஈஷா யோகா மையம் விஜய் மகேஷிடம் பெற்று சாகுபடி செய்துள்ளார். இந்த நெல்ரகம் 135 நாட்கள் வயதுடையது.

நெல் நட்ட 20வது நாளில் கடலைப் புண்ணாக்கு சாணி கலந்த இயற்கை உரத்தை ஒரே தடவை தூவினார். 15 கிலோ கடலைப்புண்ணாக்குடன் சுமார் 50 கிலோ சாணி கலந்து 1 வாரம் வைத்திருந்து பின்னர் இதனை மேலுரமாகத் தருகிறார். இதற்குப் பின்னர் நெல் பரியும் சமயம் வேப்பஎண்ணெயும், காதி சோப்புக்கரைசல் கலந்து தெளிக்கிறார். ஒரு டேங்கிற்கு (13 லிட்டர் கொள்ளளவு நீர் கொண்டது) வேப்பஎண்ணெய் 50 மி.லியும் சோப்புக் கரைசல் சிறிது சேர்த்து தெளிக்கிறார். ஏக்கருக்கு 10 டேங்க் வரை தெளிக்கிறார்.

ஏக்கருக்கு 30 மூட்டை நெல் (1 மூட்டை 62 கிலோ) எடுக்கிறார். இந்த நெல்லை அரைத்து அரிசியாக்கி கிலோ ரூ. 150 வரை விற்பனை செய்கிறார். இந்த அரிசியில் சாதம் வடித்து சாப்பிட சர்க்கரைசத்து குறைந்து நல்ல நிவாரணம் கிடைப்பதால் பலரும் இந்த அரிசியை விரும்பி வாங்குவதகாகக் கூறுகிறார்.

செந்தில்குமார், மாரியம்மன்கோவில்,
கத்தரி நத்தம்,
தஞ்சாவூர். செல்: 6369305811

## தங்கவேலின் கால்நடை மூலிகை வைத்யம்



இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகா, பூக்குளம் கிராமத்தில் திரு. தங்கவேல் வயது 51. 8வது வரை படித்துவிட்டு பாரம்பரிய கிடைத்தொழில் செய்து வருகிறார். தற்சமயம் தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் கிராமத்தில் கால்நடைகளைப் பராமரித்து வருகிறார். இவரிடம் செம்மறிஆடுகள்70, குட்டி 30, வெள்ளாடு 2 வைத்துள்ளார். வெள்ளாடு மூலம் குட்டி குடித்தது போக மிகுதிப்பாலை தன் குடும்பத்திற்கு வைத்துக்கொள்கிறார். இவரும் இவரது மனைவியும் ஆடுகளோடு சேர்ந்து தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு பகுதியில் தங்கியுள்ளனர். இவருயை பிள்ளைகள் இராமநாதபுரம் மாவட்டத்தில் சொந்த ஊரிலே இருந்து பள்ளிப்படிப்பு படித்து வருகின்றனர். கிடைத்தொழிலை கூலி ஆட்கள் இல்லாமல் தானே பராமபரித்து வருகின்றார். கால்நடை மூலிகை வைத்ய முறைகளை செய்து பார்த்த அனுபவத்தை பகிர்ந்து கொள்கிறார்.

**பெரியம்மை நோய்க்கு**

**அறிகுறிகள்: உடல் முழுவதும் அம்மை கொப்பளங்கள் பரவி இருக்கும்.** மாடு அசதியாக இருக்கும்.

உள்மருந்து : வெற்றிலை 10, ஒரு தேக்கரண்டி மிளகு, சிறிதளவு கல்உப்பு, அனைத்தையும் அரைத்து மாட்டின் தாடைப் பகுதியை பிடித்து, வாயைத் திறந்து மாட்டின் நாக்குப் பகுதியில் தடவ வேண்டும். மாடு அந்த மருந்தை சப்பி சாப்பிட வேண்டும். இவ்வாறு அம்மை நோய்க்கு ஆரம்ப கட்டத்திலேயே இப்படி செய்தால் இந்த நோயை அகற்றி விடலாம். மாட்டின் வெளிப்பகுதியில் உடல் முழுவதும் வேப்பஇலை, சோற்றுக்கற்றாழை, மஞ்சள் சேர்த்து அரைத்துப் பூச வேண்டும். இந்த மருந்தை அம்மை நோய்க்கு மட்டுமின்றி மாட்டிற்கு வரும் கொப்பளங்களையும், புண்களையும் குணப்படுத்தும்.

**ஆடு, மாடு வாய்ப்புண் மற்றும் கால் நொண்டுதல்**

சீரகம் 10 கிராம், வெந்தயம் 10 கிராம், மிளகு 10, மஞ்சள்தூள் 10 கிராம், பூண்டு 4 பல், வெல்லம் 100 கிராம், சேர்த்து நன்றாக அரைத்து இதனுடன் தேங்காய் துருவல் (ஒரு முழு தேங்காய்) சேர்த்து கையால் கலந்து நாள் ஒன்றுக்கு மூன்று முறை, 5 நாட்களுக்கு வாயின் உள்ளே கொடுக்க வேண்டும். மேல் கொடுக்கப்பட்ட அளவு 4 செம்மறி ஆட்டிற்கும் அல்லது 4 வெள்ளாட்டிற்கும் அல்லது ஒரு மாட்டிற்குமான அளவாகும். இந்த மருந்தை காலை, மாலை இரு முறை என தொடர்ந்து மூன்று நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.

**கால் புண்ணிற்கு**


புண் பகுதியை முதலில் சுத்தம் செய்ய வேண்டும். பின்னர் வேப்பிலை, குப்பைமேனி, மருதாணி, துளசிஇலை, பூண்டு, மஞ்சள் இவை அனைத்தையும் நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து ஆற வைத்து கால் புண்ணிற்கு பூச வேண்டும்.

தங்கவேல், பூக்குளம், இளஞ்சம்பூர் அஞ்சல்,
முதுகுளத்தூர் தாலுகா. இராமநாதபுரம் மாவட்டம்.
செல் : 9944164576

## மரியாபாலின் கண்டுபிடிப்புகள்


கன்னியாகுமரி மாவட்டம், கிழக்கு காரங்காடு கிராமத்தில் வசித்து வரும் திரு. மரியாபால். இவருக்கு வயது 62. இவர் 10வது வரை படித்துவிட்டு பின்னர் சொந்த முயற்சியில் எம்.ஏ. நூலகப் படிப்பு படித்துள்ளார். இவர் பல கருவிகளை கண்டுபிடித்துள்ளார். தற்சமயம் கீழ்க்கண்ட கண்டுபிடிப்புகளை முழுமையாக வடிவமைத்துள்ளார்.

**1. மரக்கிளை வெட்டும் கருவி**




இவர் இதனை 8 அடி நீளமான ஜீ.ஐ. சதுர கம்பியில் (GI Square) வடிவமைத்துள்ளார். இதன் உச்சிப் பகுதியில் வெட்டும் கத்தி உள்ளது. இந்த கத்தியை கீழே உள்ள சுற்றும் கைப்பிடி கொண்டு சுற்றினால் கத்தி கிளையை வெட்டி விடும். இந்த கிளையின் தடிமன் 25 மி.மீ.– 50 மி.மீ. வரை உள்ளதாக இருந்தால் எளிதாக வெட்டி விடலாம். இதனை வடிவமைக்க ரூ. 1100 ஆகும்.

**2. ஆடினால் நகரும் நாற்காலி**



இந்த நாற்காலியில் படத்தில் காட்டியவாறு 4 சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதில் உட்கார்ந்து கொண்டு உடம்பை ஆட்டினால் நாற்காலி நகர்ந்து செல்லும். இதில் கியர் அமைப்பு உள்ளதால் முன்புறமாகவும் பின்புறமாகவும் நகற்றலாம். இதனை வடிவமைக்க ரூ. 7000 – 10,000 ஆகும். மொத்தமாக பல எண்ணிக்கையில் தயாரித்தால் இதனுடைய விலை குறையும். முடக்குவாதத்தினால் அவதிப்படுவோர், நடக்க சிரமப்படுவோர் இதனை பயன்படுத்தி பயன் அடையலாம்.

**ஆடும் நாற்காலி**



வீட்டில் எந்த நாற்காலியாக இருந்தாலும் (பிளாஸ்டிக் நாற்காலி உட்பட), நாற்காலியின் கீழ் படத்தில் காட்டியவாறு வடிவமைப்பை இணைத்து விட்டால் நாற்காலியில் ஜாலியாக மெதுவாக ஆடலாம். சதுரமான மரச்சட்டத்தின் மேல் பிறை வடிவ அமைப்பை பொருத்திவிட வேண்டும். மரச்சட்டத்தினால் ஆன இந்த வடிவமைப்பு செய்வதற்கு ரூ. 400 மட்டும் ஆகும். மேற்கண்ட அனைத்தும் காப்புரிமை கிடைக்கப்பெற்றவைகள்.

மரியாபால், 3/63 கே, கிழக்கு காரங்காடு,
காரங்காடு அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்– 629809. செல் : 9487088501

## நாட்டுக்கோழிகளுக்கு மூலிகை வைத்யம்



ஆந்திரமாநிலத்தில் விசாகப்பட்டிணம் அருகே ஆதிவாசிகள் வசிக்கும் பகுதியில் புறக்கடை கோழி வளர்ப்புத்திட்டத்தில் பணி புரிந்து வருகிறேன். என்னுடைய அனுபவத்தில் நாட்டு ரக கோழி பராமரிப்பில் (அசீல் இனம்) சில மூலிகை வைத்ய முறைகளைப் பின்பற்றி வருகிறேன். அவைகள் பின்வருமாறு:

**குடற்புழுக்களுக்கு:** பப்பாளிவிதை, கொட்டைப்பாக்கு அரைத்து தீனியுடன் கலந்து உள்ளே தர வேண்டும். மாதம் ஒரு முறை செய்து வர வேண்டும்.

**புற ஒட்டுண்ணிகளுக்கு**

புகைமூட்டம் செய்ய வேண்டும். அடுப்பு கங்கில் வேப்பஇலை, சீத்தாப்பழ விதை, காய்ந்த புகையிலைத்

தண்டு, இலை போன்றவற்றை இட்டு வரும் புகை புற ஒட்டுண்ணி பிரச்சனைக்கு நல்ல தீர்வாகும்.

**கோழி கழிச்சலுக்கு**

வேலிப்பருத்தி இலை, கீழாநெல்லி, முருங்கைக்கீரை ஒவ்வொன்றும் 50 கிராம், பூண்டு, மஞ்சள் 10 கிராம் சேர்த்து அரைத்து தீனியில் கலந்து 10 கோழிகளுக்குத் தர வேண்டும். இதனை 2 வேளை ஒரு வாரம் கடைபிடிக்க வேண்டும்.

சன்யாசிராவ், வாசன் தொண்டு நிறுவனம்,
விசாகப்பட்டிணம், ஆந்திரா மாநிலம்.
செல் : 9989977835

## வயலுக்கு மருதாணி வேலிப்பயிர்



பொதுவாக வயலுக்கு அல்லது தோட்டத்தைச் சுற்றி முள்கிளுவை, உதியன் போன்ற மரங்களை வேலியாக வளர்ப்பர். தஞ்சாவூர் குளிச்சம்பட்டு கிராமத்தில் பல விவசாயிகள் நெல் வயலைச் சுற்றி மருதாணி செடியை வளர்த்து வருகின்றனர். மருதாணியை ஆடி மாதம் குச்சிகளை வெட்டி ஊன்றிவிடுகின்றனர். இது சில மாதங்களில் வளர்ந்து விடுகிறது.

இது மரங்களாக அதிக உயரத்துடனும், அடர்த்தியாகவும் நெருக்கி காணப்படுவதால் இந்த வேலிக்குள் ஆடு, மாடுகள் செல்வது கடினம். இதன் இலைகளை கால்நடைகள் குறிப்பாக மாடுகள் மேயாது. வெள்ளாடு மட்டும் இலைகளைச் சிறிது தின்னும். இப்பகுதியில் தன்னிச்சையாக மாடுகள் திரிவதால் இந்த மருதாணி வேலி நல்ல கவசமாக உள்ளது. ஆனால் மருதாணிச்செடி சில வருடங்களில் 10–15 அடி உயரத்திற்கு மேல் வளர்ந்து புதராக மாறும். இதனால் வெள்ளாமைக்கு பாதிப்பு வரும். இதற்காக 3 வருடங்களுக்கு ஒரு முறை வெட்டி விட வேண்டும்.

ரமேஷ், மேலத்தெரு, மாரியம்மன் கோவில், தஞ்சாவூர் மாவட்டம். செல் : 9514694286

## குமாரின் நவீன டிராக்டர்

தஞ்சாவூருக்கு அருகே குளிச்சப்பட்டு கிராமத்தில் திரு. குமார் விவசாயம் செய்து வருகிறார். இவர் ஐ.டி.ஐ. படித்து விட்டு வெளிநாட்டில் பெட்ரோல் பம்பிங் வேலை செய்து வருகிறார். அவ்வப்போது சொந்த ஊருக்கு வந்து விவசாயத்தையும் கண்காணித்து வருகிறார். இவருக்கு அதிக அளவில் வயல் உள்ளதால் கூலி ஆட்களின் வேலையைக குறைக்க புதிய வேளாண்மை இயந்திரங்களை வடிவமைத்து வருகின்றார்.



இவர் நெல் வயலில் தொழி உழவு செய்ய ஒரு டிராக்டரையும் மற்றும் களையெடுக்கவும் கோனோ வீடரை டிராக்டரில் இணைத்துள்ளார். வயலில் பயிருக்கு மருந்து தெளிக்க டிராக்டரில் பேட்டரியில் இயங்கும் கருவி வடிவமைத்துள்ளார். (வாகனத்தின் முன்புறம் மழைநீரைப் போக்குவதற்கு கண்ணாடியில் வைப்பர் என்ற சாதனம் போன்று இந்த தெளிப்பான் வேலை செய்யும்).

குமார், குளிச்சப்பட்டு, மாரியம்மன்கோவில்,
தஞ்சாவூர். செல்: 9943212663

## மாணவர்களின் கண்டுபிடிப்புகள்


**உடைந்த ஜீ–லெட் (எல்.இ.டி.) பல்பு மீண்டும் உபயோகப்படுத்துதல்**



ஜீலெட் பல்பில் (G.LED Bulb) பில் 3 பகுதிகள் உள்ளன. 1. பல்பின் வெளிப்புற பீங்கான் , 2. சொருகும் ஹோல்டர், 3. எரியும் சர்க்யூட் (PCBA LED).
இந்த பல்பு கீழே விழுந்துவிட்டால் எரியும் சர்க்யூட் இழையை அப்புறப்படுத்தி வேறு பல்பில் புதிய இழையை பொருத்தி விடலாம். அதாவது நமது செல் போனில் சிம்கார்டை மாற்றுவது போல் செய்து விடலாம்.

ஆதித்தியராஜ்சோப்ரா, 10வது வகுப்பு மாணவர், இந்திராபுரம், காசியாபாத், உத்திரப்பிரதேசம்

## பார்வையற்றோருக்கு குரல் மூலம் வழி காட்டும் கருவி





இந்த செயலியை (ஆப்) நமது செல்போனில் பதிவிறக்கம் செய்து நிறுவி வைத்துவிட்டால் நாம் செல்லும் இடத்திற்கு (செல்லும் இடத்தை முன்னரே பதிவு செய்து வைத்து விட வேண்டும்) குரல் மூலம் வழிகாட்டும். உதாரணமாக மாடியில் ஏறும் படிக்கட்டுகளின் எண்ணிக்கை, பாத்ரூம் உள்ள இடம் இவைகளை சரியாக காட்டி விடும். இதனால் நடக்கும் சமயம் தடங்கல் உண்டாகாது.

உதயகுமார்ரவிகுமார், 9 வது வகுப்பு, தேசிய திறந்த வெளி பள்ளிக்கூடம், எர்ணாகுளம், கேரளா.

## வேளாண்மை வயல் வெளிப்பள்ளிகள்

மத்திய கிழக்கு நாடான சிரியாவில் 30 விவசாயிகளுடன் அவர்களுடைய முக்கியமான பிரச்சனை என்ன என்று கேட்டோம். அவர்களுக்கு பால்மாடுகளுக்கும், செம்மறி ஆடுகளுக்கும் போதுமான தீவனம் கிடைப்பதில்லை. பசுந்தீவனம் விலைக்கு வாங்கினால் அதிக பணம் செலவாகிறது எனக் கூறினர். கோடையில் குதிரைமசால் தீவனம் விளைவிக்கிறார்கள். இதனை மொத்தமாக அறுவடை செய்து தீவனமாகத் தருவார்கள். இதற்கு பதிலாக 20–30 நாட்கள் இடைவெளியில் அறுவடை செய்து தீவனமாகக் கொடுத்தால் உபரி தீவனத்தை சேமிக்க முடியும். சேமிப்பிலும் பசுந்தீவனத்தை கையால் அழுத்தி மரப்பெட்டிகளில் நிரப்புகின்றனர். இவ்வாறில்லாமல் பசுந்தீவனத்தை மரப்பெட்டியில் நிரப்பி ஒரு அழுத்தும் பலகையை உருவாக்கினால் அதிக தீவனத்தை கழித்து விடாமல் குளிர் காலத்தில் தீவனமாகத் தர முடியும் என்று இந்த உத்தியை ஒரு விவசாயி கூறினார்.




2. ஆப்பிரிக்க நாடான கானா என்ற நாட்டில் மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு கதிருக்குள் சென்று சேதம் ஏற்படுத்தும் படைப்புழுக்களை கட்டுப்படுத்துவது சிரமமாக இருந்தது. ஒரு புழுவைப் பிடித்து நிலத்தில் விட்டால் எறும்புகள் அதனைச் தூக்கிச் செல்வதைக் கவனித்த ஒரு விவசாயி சர்க்கரைக் கரைசலை பயிரின் மேல் தெளித்து சோதனை செய்தார். சர்க்கரைபாகுவின் இனிப்பிற்குக் கவரப்பட்ட எறும்புகள் மக்காச்சோளப் பயிரின் மேல் சென்று கதிருக்குள் இருக்கும் புழுக்களையும் பிடித்து இழுத்து வந்து பயிர் சேதத்தைக் குறைத்ததாம்.

அஹமதாபாத்தில் ஜனவரி 28–30, 2025ல் நடைபெற்ற உலகளாவிய அடித்தள கண்டுபிடிப்புகள் பற்றிய கருத்தரங்கில் உலக உணவு மற்றும் வேளாண்மை ÃWt d « (FAO) மூலம் பகிரப்பட்டது.

## மோட்டார் சைக்கிளில் பல்நோக்கு வேளாண்மைக்கருவி

குஜராத்தில் அம்ரேலி மாவட்டத்தில் மன்சுக்பாய் என்ற விவசாயி புல்லட் மோட்டார் சைக்கிளில் உழுதல், விதைத்தல், களையெடுத்தல், மருந்து தெளித்தல் போன்ற பல வகையான பணிகளை செய்வதற்கு வடிவமைத்துள்ளார்.



விவசாய வேலைகள் இல்லாத நாட்களில் சாதாரண மோட்டார் சைக்கிளாக அதாவது இரு சக்கர வாகனமாக பயன்படுத்தலாம். இதில் அவ்வப்போது கருவிகளை இணைப்பதற்கும், கழற்றி விடுவதற்கும் வசதி உள்ளது. இது 10 ஹெச்பி மோட்டார் திறன் உள்ளது. டீசலில் இயங்கும். செல்ப் ஸ்டார்ட்டர், 35 ஆம்பியர் பேட்டரி, 12 வோல்ட், ஒரு சிலிண்டர், ஏர்கூல் இன்ஜின், 510 சி.சி. திறன் உடையது. ஒரு மணிக்கு வேகம் 25 கி.மீ. வரை செல்லும். இதன் எடை 400 கிலோ. தூக்கும் பொருள் எடை ஒரு டன்.

Kishan. M. Patel Cell :8160367542
Mansukhbhai. A. Jagani
Cell : 6355987500, 9925447400
Babra Vashavad Road, At. Mota Devliya
Tk. Babra, Dist Amreli, Gujrat

## கோனோ வீடரை டிரக்டரில் வைத்து இயக்கும் கருவி



ரமேஷ், தஞ்சாவூர், செல் :9514694286

## பாலித்தின் பைகளை மறுசுழற்சி செய்து கைவினைப் பொருட்கள் தயாரித்தல்



குஜராத் மாநிலம் பூஜ் நகரில் ராஜீபென் என்பவர் உபயோகமில்லாத பிளாஸ்டிக், பாலித்தீன் பைகளிலிருந்து கயிறு பிரித்து பின்னர் இதனை நெசவுத்தறியில் நெய்து சிறிய கைப்பைகள் போன்ற பொருட்களை தயார் செய்து விற்பனை செய்கிறார். இவருடைய விடாமுயற்சி தன்னம்பிக்கை பாராட்டக்கூடியது.

## மக்கிய உரத்தை(கம்போஸ்ட்)தூவும் கருவி



குஜராத் மாநிலம் பாலன்பூர் நகரில் ஜஹிர்அபாஸ் என்பவர் மக்கிய உரத்தை தூவும் கருவியை உருவாக்கியுள்ளார். இந்தக்கருவியை டிராக்டருடன் இணைக்க வேண்டும். டிராக்டர் (45 ஹெச்பி) மூலம் இயங்கும் இக்கருவியைக் கொண்டு 15 நிமிடத்தில் 5 டிராலி மக்கிய உரத்தை தூவி விடலாம். இதனுடைய விலை ரூ. 6,50,000.

ஜஹிர்அபாஸ், பாலன்பூர் நகர், குஜராத் மாநிலம்.
செல் : 9825411510

## வாசகர் வட்டம்

### மக்காச்சோளம் அறுவடை செய்த நிலத்தில் ஆடு மேய்ப்பதை தவிர்த்தல்

மக்காச்சோளம் அறுவடை செய்த பின் சிதறி இருக்கும் கதிர் மணிகளை ஆடுகள் விரும்பி உண்ணும். இதை அளவுக்கு அதிகமாக எடுத்துக் கொண்டால் வயிறு உப்பிசம் ஏற்பட்டு பின்னர் இறக்க நேரிடும். சினையான ஆடுகள் உண்டுவிட்டால் உடனே இறப்பு நேர்ந்து விடும். இக்காரணங்களைக் கொண்டே என்னுடைய ஆடுகளை பொதுவாக இது போன்ற நிலங்களில் விடுவது இல்லை. ஆடு முதலில் மக்காச்சோள மணிகளை உண்ணும். பின்னர் தான் சோகையை உண்ணும். அப்படி ஆடுகளை மக்காச்சோள அறுவடை செய்த நிலத்தில் மேய விட்டால் சில நிமிடங்கள் தான் விட வேண்டும். பின்னர் வேறு இடத்திற்கு ஓட்டிவிட வேண்டும்.

இரவிச்சந்திரன், வெம்பூர் ஆடுவளர்ப்போர் சங்கம்,
வெம்பூர்அஞ்சல், எட்டையாபுரம் தாலுகா.
தூத்துக்குடி மாவட்டம். செல் : 9626672459

### சித்ராவின் கால்நடை மூலிகை வைத்யம்



நான் கடந்த 5 ஆண்டுகளாக கால்நடைகளுக்கு மூலிகை வைத்யம் செய்து வருகிறேன். எங்கள் ஊர் திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை தாலுகா குட்டம் கிராமம். இப்பகுதியிலுள்ள மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு கால்நடைகளை நம்பியே உள்ளனர். குறிப்பாக பால்மாடுகள், வெள்ளாடு வளர்ப்பு அதிகமாக உள்ளது. 2018ல் சேவா மூலம் எங்களுக்கு கால்நடைகளுக்கு மூலிகை வைத்யம் செய்ய பயிற்சி கொடுத்தனர். பின்னர் நாங்களே கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு பிரச்சனைகளுக்கு ஏற்றாற்போல் மூலிகை மருந்து தயார் செய்து கொடுத்து வருகிறேன்.

ஆரம்ப காலத்தில் எங்கள் பகுதியில் மூலிகை பொருட்களை கால்நடை வளர்ப்போருக்குத் தரும் சமயம் சற்று கடினமாயிருந்தது. சில மாதங்களில் இதன் பலனைப் பார்த்ததும் தொடர்ந்து கொடுக்குமாறு கேட்டுக் கொண்டனர். இங்கு வெள்ளாடு வளர்ப்பு, பால் மாடு வளர்ப்பு அதிகமாக உள்ளது. தற்சமயம் மாதம் 2000–3000 மூலிகை மசாலா உருண்டைகள் தயார் செய்து தருகிறேன். இது தவிர மத்தான் தைலம், வெற்றிலைப்பொடி, குப்பைமேனிபொடி, ஆவாரம் பொடி, மருதாணிப்பொடி இவைகளையும் விநியோகித்து வருகிறேன். இதனால் மாதம் ரூ. 7000–12000 வரை வருமானம் கிடைக்கிறது. மேலும் பசுமாடுகள் ஈனுவதற்கு சிரமப்பட்டாலோ, கன்று வயிற்றிற்குள் இறந்து விட்டாலே மாடுகளுக்கு எந்த பாதிப்புமில்லாது கையை கருவறைக்குள் விட்டு நேர்த்தியாக கன்றுகள் எடுக்கிறேன். கால்நடை மருத்துவமனை மருத்துவர்களுடன் இணைந்தும் முகாம் நடத்தவும், முதலுதவி சிகிச்சை செய்யவும் சென்று வருகிறேன்.

சித்ரா, குட்டம், திசையன்விளை, திருநெல்வேலி மாவட்டம். செல் : 6382039189

### மாடுகளுக்கு வலிப்பு என்ற ஜன்னி வந்தால்

மாடு கன்று போட்ட பின் குறிப்பாக பசு மாட்டு கன்றுகளுக்கு கால்கள் சரியாக ஊன்றி நடக்க முடியாமல் கஷ்டப்படும். இதற்கு அறுவை சிகிச்சை செய்வது சிறந்தது. மூலிகை வைத்யம் செய்தால் சிறிது நிவாரணம் கிடைக்கும். இதற்கு கற்பூரவள்ளி தழை, தாழியிலை, நொச்சி இலை, வேலிப்பருத்தி இலை, ஒவ்வொன்றும் ஒரு கைப்பிடி அளவு, கருஞ்சீரகம் 20 கிராம், கடுகு 50 கிராம், மிளகு, ஓமம் 20 கிராம், சுக்கு 50 கிராம் சேர்த்து அரைத்து ஒரு நாளைக்கு ஒரு வேளை 3 நாட்கள் கொடுத்து வர வேண்டும். வெளிப்புறம் கால்பகுதியில் வேப்பெண்ணையில் சிறிது மிளகு, ஓமம், வசம்பு சேர்த்து காய்ச்சி பூசி வர வேண்டும். இதனை 7 நாட்கள் கடைபிடிக்க வேண்டும்.

மயில்சாமி கவுண்டர், இடையர்பாளையம்,
அன்னூர் மேட்டுப்பாளையம் அஞ்சல், அன்னூர் வழி
கோயம்புத்தூர்மாவட்டம்–641 653.
செல் : 9994509868

## மானாவாரியில் இயற்கை மக்காச்சோளம்

1. இரண்டு உழவு போட்டு பண்படுத்த வேண்டும். பின் 100கிலோ. கன ஜீவாமிருதம் அடி உரமாக போட வேண்டும். பின் விதைகள் ஊன்ற வேண்டும். நம் வசதிக்கு ஏற்றார்போல் மக்காச்சோளம் விதைக்கு அருகே தட்டைப்பயிறு விதை ஊன்றலாம்.

2. விதை முளைத்த 10வது நாளில் 10 லிட்டர் தண்ணீருக்கு 100 மி.லி அளவில் மீன்அமினோஅமில கரைசல் கலந்து தெளிப்பு செய்ய வேண்டும். இதனால் முளைத்தவுடன் முயல் வெட்டுவதில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம். உரமாகவும் செயல்படும்.

3. 30 வது நாள் 10 லிட்டருக்கு 1 லிட்டர் விகிதத்தில் ஜீவாமிருதம் கரைசல் தெளிப்பு செய்ய வேண்டும். களை வெட்டிய பின் மீண்டும் ஒரு முறை கன ஜீவாமிருதம் 100 கிலோவை (ஓர் ஏக்கருக்கு) செடிக்கு செடி இட வேண்டும்.

4. இந்த பட்டத்தில் ஒரு புறம் மக்காச் சோளம், மறுபுறம் தட்டைப்பயிறு போட்டால் சிறப்பு.

5. ஆறுபது நாளில் ஒரு ஸ்பேர ஜீவாமிருதம் தெளிக்க வேண்டும். 100 நாட்களில் மகசூல் தயாராகி வரும்.

ஓர் ஏக்கருக்கு சராசரி 25 மூடை மகசூல் கிடைக்கும். நல்ல மழைப்பொழிவு சாதமாக இருந்தால் இயற்கை வேளாண்மையில் 2வது வருடத்தில் 30 மூடைகள் மகசூல் கிட்டும். ஒரு மூடை 80 கிலோ விதை கொண்டது.

தமிழ்மணி, வைத்யலிங்காபுரம், ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுகா. விருதுநகர் மாவட்டம், செல் : 9245134568

## மானாவாரியில் மரப்பயிர் சாகுபடி

என்னுடைய 30 ஏக்கர் கரிசல் நிலத்தில் வாகை, வேம்பு, மூங்கில், சுபாபுல், புளி, செம்மரம், சவுக்கு, காயா, மஹாகனி, பென்சில்மரம் போன்றவைகளை கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் நட்டு பராமரித்து வருகிறேன். புளியிலிருந்து ஒவ்வொரு மரத்திலிருந்தும் ரூ. 100 வருமானம் கிடைக்கும். 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மூங்கில் வெட்டலாம். 15 ஆண்டுகளுக்கு ஒரு முறை வாகை மரம் வெட்டி (3–5 அடி சுத்து) வருமானம் பெறலாம். எங்கள் மரப்பயிர் சாகுபடியால் பண்ணைக்கு அருகில் உள்ள தோட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் கூடி கிணறுகள் வற்றாமல் உள்ளன. மரம் சாகுபடி செய்வது வங்கியில் நிரந்தர வைப்புத்தொகை போட்டு வைப்பது போன்றதாகும். அதாவது பின்னாளில் நல்ல பலன் கிடைக்கும்.

மரப்பயிர் சாகுபடி செய்த தோட்டத்தை அடிமட்ட கண்டுபிடிப்பாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் 30–6–2024 அன்று பார்வையிட்டனர்.



எஸ். நந்தகுமார், கொண்டேகவுண்டன்பாளையம், பொள்ளாச்சி தாலுகா, கோவை மாவட்டம்.
செல் : 8344330420.

## இயற்கை வேளாண்மையில் மண்ணின் தன்மை மேன்மையடைதல்

கடந்த 4 வருடங்களாக கரிசல் பூமியில் நெல் பயிரிட்டு இயற்கை வேளாண்மை செய்து வருகின்றேன். சென்ற வருடம் சீரகச்சம்பா பயிர் செய்தேன். இவ்வருடம் தூயமல்லி நெல்ரகம் பயிர் செய்துள்ளேன். இயற்கை வேளாண்மையால் கீழ்க்கண்ட மாற்றங்களை எண்ணால் பார்க்க முடிகிறது.

1. மண் மிருதுவாகிறது. இதனால் பாய்ச்சப்படும் நீர் உடனே கீழே இறங்கி விடுகிறது. அதாவது நீரை பூமி உறிஞ்சி விடுகிறது. இதனால் தண்ணீர் நித்தமும் பாய்ச்சுவோம். ஆரம்பத்தில் அதாவது 3 ஆண்டுகளுக்கு முன்னர் நீர் பாய்ச்சினால் 4–7 நாட்கள் நிலத்திலேயே நிற்கும். தற்சமயம் தண்ணீர் விரைவில் உறிஞ்சப்படுகிறது.

2. மண்புழுக்கள் பெருகி நிலத்தில் மேலும் கீழும் சென்று வருவதால் மண் மிருதுவாகி காற்றோட்டம் ஏற்பட்டு நீர் விரைவில் நிலத்திற்குள் சென்று விடுகிறது.

3. இயற்கை வேளாண்மையினால் பயிர் வளர்ச்சியும் நன்றாக உள்ளது.

தமிழ்மணி, வைத்யலிங்காபுரம், ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுகா. விருதுநகர் மாவட்டம்.செல் : 9245134568

**கேள்வியும் பதிலும்**

கேள்வி:

மாலை 6.00 மணி அளவில் மாடு கன்று ஈன்றது. அதன் பிறகு 7.00 மணி அளவில் பால் கறந்த பொழுது பால் சிவப்பு நிறத்தில் வருகிறது. மடியும் வீங்கியுள்ளது. இது எதனால் வந்தது மற்றும் வைத்ய முறையை கூறுங்கள்?

வந்தவாசி ரஞ்சித்தின் பதில்:

இந்த நோயானது பால் காய்ச்சல் எனப்படும். இது கால்சியம் பற்றாக்குறைவால் வருகின்றது. ஈன்ற மாட்டுகளுக்கு இது காணப்படும். இதற்கு கறிவேப்பிலை 2–3 கைப்பிடி, வெல்லம் 50 கிராம், இவை இரண்டையும் அரைத்து ஒரு எலுமிச்சை பழம் அளவு எடுத்து காலை மாலை ஒரு முறை என மூன்று நாட்களுக்கு கொடுக்க வேண்டும். கற்றாழை 200 கிராம், சுண்ணாம்பு 10 கிராம், மஞ்சள் 50 கிராம் இவை அனைத்தையும் அரைத்து மடியின் வெளிப் பகுதியில் பூச வேண்டும்.

பேராவூரணி செல்வியின் பதில்:

இதே பிரச்சனைக்கு வேறு ஒரு தீர்வு.

முருங்கைக்கீரை, கறிவேப்பிலை, பிரண்டை ஒரு கைப்பிடி அளவுக்கு எடுத்து அரைத்து 2 உருண்டை செய்து வெல்லம் 15 கிராம் சேர்த்து வெந்நீர் 250 மி.லியில் கலந்து 2 வேளை கொடுக்கவும். இதனை தொடர்ந்து 5–7 நாள் கொடுக்கலாம். மடிப்பகுதியில் சோற்றுக்கற்றாழை, வேலிப்பருத்தி, மஞ்சள், சுண்ணாம்பு சேர்த்து அரைத்து களிம்பாக பூச வேண்டும்.

**இந்து பத்திரிக்கை செய்தியும் மாற்று வழியும்**

பிப்ரவரி 10ம் தேதி பல பத்திரிக்கைகளில் வந்த செய்தி : குடற்புழு நீக்கும் மாத்திரை சாப்பிட்ட மாணவி கவிபாலா உயிரிழப்பு, சாலை மறியலில் ஈடுபட்ட மக்கள்.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி அருகில் உள்ள பள்ளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிப்ரவரி 10, 2025 அன்று குடற்புழு நீக்க மாத்திரை (அல்பென்டோசோல்) சாப்பிட்ட மாணவி திடீர் உடல்நலக் குறைவால் உயிரிழந்த சம்பவம் பரபரப்பையும் பெரும் சோகத்தையும் ஏற்படுத்தியது.

அழகியநாயகிபுரம் அரசு ஆரம்பசுகாதார நிலையத்தில் இருந்து இந்தப் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கியுள்ளனர். மாணவ மாணவிகள் மாத்திரை சாப்பிட்டுள்ளனர். இந்த நிலையில் மாணவி கவிபாலா மாத்திரை சாப்பிட்ட சிறிது நேரத்தில் மயங்கி சரிந்த நிலையில் மூக்கில் ரத்தம் வெளியேறி இறந்துவிட்டார், மேலும் இதே பள்ளியில் படிக்கும் 2 மாணவி சகாயமேரி 10ம் வகுப்பு படிக்கும் மாணவி தியா ஆகியோருக்கும் வாந்தி மயக்கம் ஏற்பட்டது.

இறந்த மாணவிக்கு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் ரூ. 5 லட்சம் நிவாரணத் தொகையாகவும், மாணவியின் குடும்பத்திற்கு 2.5 சென்ட் நிலம் குடியிருப்புக்காகவும் ஒதுக்கப்பட்டது.

இறப்புக்குக்காரணம் குடல்புழு நீக்க மருந்தான அல்பென்டோசோல் என்ற மருந்தினால் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பு ஏற்றுக்கொள்ளவில்லை.

கவிபாலா குடும்பத்தினரை விசாரிக்கும் சமயம் அந்த மாணவிக்கு பல வருடங்களாக இருதயக் கோளாறு இருந்ததாகவும் அதற்கு நித்தமும் மாத்திரை எடுத்து வந்ததாகக் கூறுகின்றனர். வாந்தி வந்த 2 மாணவிகளுக்கும் மருந்து எடுக்கும் முன்னர் அன்று காய்ச்சல் இருந்ததாம். இச்சூழலில் குடற்புழு நீக்க மருந்து சாப்பிட்டுள்ளார்கள்.

நமது பாரம்பரிய வைத்தியத்தில் குடற்புழு நீக்கத்திற்கு பின்பற்றப்படும் மாற்று வழிகள் பின்வருமாறு :

1. இரவில் வேப்பெண்ணெய் ஒரு தேக்கரண்டி அளவு குடித்தல்.
2. அதிகாலையில் பாகற்காய்ச்சாறு 2 தேக்கரண்டி குடித்தல்.
3. அரை கைப்பிடியளவு வேப்ப இலையுடன் சிறு துண்டு மஞ்சள் அரைத்து சாப்பிடுதல்.
4. ஒரு கைப்பிடியளவு சிறு குறிஞ்சான் இலைகளை 1 டம்ளர் தண்ணீரில் வேக வைத்துச் சாறு எடுத்து கால் டம்ளர் குடித்தல்.
5. ஒரு கைப்பிடியளவு அகத்திக்கீரைச்சாறு கால் டம்ளர் எடுத்து குடித்தல்.
6. 2 பெரிய துண்டுகள் பப்பாளிக்காயைப் பச்சையாகச் சாப்பிடுதல்.
7. ஒரு கைப்பிடியளவு நில ஆவாரை இலையை 1 டம்ளர் தண்ணீரில் கசாயம் செய்து அரை தேக்கரண்டி விளக்கெண்ணெயுடன் கலந்து, இரவில் குடித்தல்.
8. சிறு குழந்தைகளுக்கு 1 செ.மீ. அளவு வசம்பைச் சுட்டுத் தூள் செய்து சாப்பிடுதல்.


9. மாதுளைப் பழத்தோலைக் காயவைத்துத் தூள் செய்து ஒரு தேக்கரண்டி சாப்பிடுதல்.

நன்றி : நலம் தரும் மூலிகைகள் புத்தகம் 2003
ஆசிரியர் : ஆன் விக்டோரியா

நம் வழி வேளாண்மை இதழில் குடற்புழு நீக்கத்திற்கு வேப்பெண்ணெயில் வெள்ளைப்பூண்டு காய்ச்சிய தைலமும், விளக்கெண்ணெயும் முறையே அமாவாசை, பௌர்ணமி நாட்களில் சிறு குழந்தைகளுக்கு சங்கில் வைத்து ஊற்றும் முறை கொடுக்கப்பட்டுள்ளது.

## வாழை நாற்றிலிருந்து கயறு பிரிக்கும் கருவி

மதுரை மாவட்டம் மேலக்கால் ஊரில் திரு. முருகேசன் வாழை நாற்றிலிருந்து நார் பிரிக்கும் கருவியை உருவாக்கியுள்ளார். இதனால் வாழைநார் மூலம் பல கைவினை பொருட்களான கூடை, தட்டு, மற்றும் அலங்கார பொருட்கள் தயார் செய்து விநியோகித்து வருகிறார். இந்த இயற்கை முறையில் தயாரித்த கைவினை பொருட்களுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி உள்ளது. இவர் வாழை மட்டையிலிருந்து நார் எடுத்தலையும், பின் கயிறு திரித்தலுக்கும் தனிதனியே செய்து வந்தார். தற்சமயம் 2 வேலையும் செய்ய கூடிய கருவியை உருவாக்கியுள்ளார். இதே கருவியில் 2 பிரியாக திரித்தலுக்கு மேலும் ஒரு கருவியை தற்போது உருவாக்கியுள்ளார். ஒற்றைபிரி கருவி ரூ. 1,20,000 க்கு கொடுத்து வருகிறார். இரட்டைபிரி கருவியை தயாரிக்க செலவு ரூ. 2,50,000 ஆகும். இதனால் கூலி ஆட்களினுடைய வேலை குறையும். புதிய கருவியில் 3 மோட்டார்கள் (0.5 ஹெச்பி) உள்ளன.



இந்த புதிய கருவியினால் கூலி ஆட்களின் எண்ணிக்கையை பாதியாக குறைத்து விடலாம். சுமார் 6 மணி நேரத்தில் 8000 மீட்டர் நீளமான ஒற்றை பிரி கயிறையும் அல்லது 4000 மீட்டர் நீளத்தில் இரட்டை பிரி கயிறையும் உருவாக்கலாம். இரட்டை பிரி கயிறு கொண்டு தயாரிக்கப்படும் பொருட்களான விளக்கு கூடு, காய்கறி வாங்கும் தட்டு போன்ற 15 வகையான கைவினை பொருட்கள் அதிக அளவில் தயாரித்து விற்பதற்கு முடிகிறது.

திரு. முருகேசன்
மேலக்கால், சோழவந்தான் வழி
மதுரை மாவட்டம்
செல் : 9360597884

## கால்நடை மூலிகை வைத்ய செயலியில் வரும் வைத்ய முறைகள்

நம்வழி வேளாண்மை இதழில் இது வரை வெளி வந்த கால்நடை மூலிகை வைத்ய முறைகள் செயற்கை நுண்ணறிவு செயலி மூலம் எழுத்து வடிவில், குரல் வடிவில் வருவதற்கு கீழ் கண்ட வைத்ய முறைகள் கொடுக்கப்பட்டுள்ளன:

**1. மாடுகளுக்கான மூலிகை வைத்யம்**

**1.1. மூலிகை மசால் உருண்டை தயார் செய்தல்**

மாடுகளுக்கு மூலிகை மசால் உருண்டையை 1 மாத கால இடைவெளியில் கொடுப்பதால் கால்நடைகளுக்கு உண்டாகும் வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளான தீவனம் எடுக்காமல் இருத்தல், தண்ணீர் குடிக்காமல் இருத்தல், அசை போடாமல் இருத்தல், வயிறு உப்பிசம், மெலிந்து இருத்தல் போன்றவற்றிற்கும் மற்றும் நோய் வரும் முன் தவிர்ப்பு நடவடிக்கைக்கும் இது உதவும். இதனை தயாரிக்க தேவையான மூலிகை மற்றும் கடைச்சரக்குப்பொருட்கள் (5 மாடுகளுக்கு தேவையானது) கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

மிளகு – 10 கிராம், சீரகம் – 10 கிராம், கொத்தமல்லி விதை – 20 கிராம், வெந்தயம் – 10 கிராம், ஓமம் – 10 கிராம், சுக்கு – 50 கிராம், கொம்பு மஞ்சள் – 50 கிராம், சோற்றுக் கற்றாழை – 100 கிராம், சீந்தில் என்ற அமிர்தவள்ளி (இலை, தண்டு ) – 100 கிராம், வெள்ளைப்பூண்டு – 50 கிராம், மிளகாய் வத்தல் – 50 கிராம், வெற்றிலை (இலை எண்ணிக்கை) – 10, கறிவேப்பிலை – 100 கிராம், துளசி இலை – 50

கிராம், ஆவாரம் (இலை மற்றும் பூக்கள்) – 100 கிராம், வேப்பிலை – 100 கிராம், கொய்யாக்கொழுந்து –100 கிராம், தேங்காய்த்துருவல் – 100 கிராம், வெல்லம் 100 கிராம், கல்உப்பு 50 கிராம், சமையல் சோடா (ஆப்பசோடா) 100 கிராம்.

**மூலிகை மசால் உருண்டை தயாரிக்கும் முறை :**

முதலில் கடைசரக்குப் பொருட்களான மிளகு, சீரகம், கொத்தமல்லி, வெந்தயம், ஓமம், சுக்கு, கொம்பு மஞ்சள், மிளகாய் வத்தல் ஆகியவற்றை இடித்து ஒரு மிக்ஸியில் இட்டு தூள் செய்ய வேண்டும்.

2) புதிதாக கொண்டு வந்த தாவரப் பொருட்களான சோற்றுக் கற்றாழை, கறிவேப்பிலை, வேப்பிலை, கொய்யாக்கொழுந்து, தேங்காய், துளசி, வெள்ளைப் பூண்டு, சீந்தில், ஆவாரை ஆகியவற்றை இடித்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

3) முதலில் தயாரிக்கப்பட்ட கடைச்சரக்கு தூளையும், இரண்டாவதாக இடித்து அரைத்து எடுத்துக் கொண்ட மூலிகை கலவையையும் சேர்க்க வேண்டும். இத்துடன் தூள் செய்யப்பட்ட வெல்லம், கல் உப்பு மற்றும் ஆப்ப சோடாவையும் நன்றாக கலந்து உருண்டை பிடித்து (எலுமிச்சை பழம் அளவு சுமார் 50–70 கிராம்).



மூலிகை மசால் மருந்து உருண்டையை மாடுகளுக்கு வழங்கும் அளவும் முறையும் :

1) வளர்ந்த மாடுகளுக்கு ஓர் உருண்டை வாய் வழியே உள்ளே புகட்ட வேண்டும்.

2)கன்றுக்குட்டிகளுக்கு மூலிகை மசால் உருண்டையினை பாதி அளவாக 25 கிராம் அல்லது ஒவ்வொரு கன்றின் எடைக்கு ஏற்ப அளவைக் குறைத்து கொடுக்க வேண்டும்.

3) மூலிகை மசால் உருண்டையை தேவைக்குத் தகுந்தபடி மாதம் ஒரு முறை வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும்.

4) பிரச்சனைகள் உள்ள மாடுகளுக்கு மூலிகை மசால் உருண்டையை தொடர்ந்து 2 அல்லது 3 நாட்களுக்கு ஒரு வேளை கொடுக்கலாம்.

5) மூலிகை மசால் உருண்டைகளை கொடுப்பதால் கீழ்க்கண்ட பிரச்சனைகளுக்கும் தீர்வாக அமையும்.

சினை பிடிக்காமை, இனப்பெருக்க பிரச்சனை, குடற்புழுக்கள், மாடுகளுக்கு நோய் வரு முன் காப்பாக கீழ்க்கண்ட நோய்களுக்கும் இந்த மூலிகை மசால் கலவை மருந்து பயன்படுத்தி நோய் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கலாம்.

கோமாரி நோய் (கால்காணை, வாய்காணை )
நீல நாக்கு நோய், காய்ச்சல் (நுண்கிருமிகளால் வரும் காய்ச்சல்)மடிநோய், தொண்டை அடைப்பான்.

**2.வாயு அதிகரிப்பால் ஏற்படும் வயிறு உப்பிசம்**

நோய் அறிகுறிகள் :



மாடுகளின் இடது பக்கத்தில் வயிறு பெரிதாக உப்பி வீக்கமாகவும் தோலை அழுத்திக் கொண்டிருக்கும். முன்பக்கம் உள்ள நுரையீரல் பகுதியில் வயிறு உப்பி அழுத்தம் அதிகமாக இருப்பதால், மாடு மூச்சுவிட முடியாமல் பாதிக்கப்படும். வலி அதிகம் ஏற்படும் போது பல்லை நற நற என்று கடிக்கும்.

நோய் காரணங்கள் :

1) தீவனத்தை திடீரென்று மாற்றம் செய்து கொடுப்பது.

2) மீதமான சமைத்த உணவுகள் அரிசி சோறு, பொங்கல், கெட்டுப்போன உணவு முதலியவைகளை கொடுப்பது.

3) புரதச்சத்து தீவனச்செடிகளான முயல் மசால், வேலி மசால், அகத்தி, முருங்கை இலை, சுபாபுல், கிளிரிசிடியா ஆகியவைகளை அளவுக்கு அதிகமாக வழங்குவது அல்லது அடர் தீவனத்தை அதிகமாக கொடுப்பது.

வைத்தியம்:

1) விளக்கெண்ணைய் 200 மி.லியுடன் தேவையான வெதுவெதுப்பான குடி தண்ணீர் சேர்த்து நன்றாக குலுக்கி இந்த திரவக் கலவையினை 4 – 6 மணி நேரம் வரை இடைவெளிவிட்டு இருமுறை பாதிக்கப்பட்ட பெரிய மாடுகளுக்கு வாய் வழியே புகட்ட வேண்டும்.

2) வெற்றிலை 10 எண்ணிக்கை இலையுடன் இஞ்சி 20 கிராம், மிளகு 10 கிராம், வெள்ளைப்பூண்டு 10 கிராம், கல் உப்பு 50 கிராம் ஆகியவை சேர்த்து நன்றாக இடிக்கவும். மேற்கண்ட இடித்த கலவையுடன் வெது வெதுப்பான குடி நீரில் கலந்து 6 மணி நேரம் இடைவெளியில் வாய் வழியே மாடுகளுக்கு கொடுக்க வேண்டும்.

மேற்கண்ட இடித்த கலவையின் அளவை சிறிய கன்றுகளின் வயிறு மற்றும் உடல் எடைக்கு தகுந்த படி குறைவான அளவு கொடுக்கவும்.

### 3. கழிச்சலுக்கு



அறிகுறிகள் : சாணம் தண்ணீராக வெளியேறும்

நோய் காரணங்கள் :


செரியாத்தன்மை; கெட்டுப்போன தீவனம் உண்பது; விஷச் செடிகள் உட்கொண்டதால்.

வைத்தியம் :

1. வேப்பங்கொழுந்து, கொய்யாக் கொழுந்து, ஆவாரம் ஒவ்வொன்றும் கைப்பிடி அளவு எடுத்து சீரகம் 10 கிராம், வெல்லம் 100 கிராம் சேர்த்து அரைத்து உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

2. கொய்யாக் கொழுந்து ஒரு கைப்பிடி அளவு, சுக்கு 50 கிராம், வெல்லம் 100 கிராம் ஆகியவற்றை தனித்தனியாக இடித்து இந்த மூலிகைக்கலவையை 3 உருண்டையாக பிரித்து ஒரு வேளைக்கு ஒரு உருண்டை வீதம் 3 வேளை கழிச்சல் நிற்கும் வரை கொடுக்க வேண்டும்.

### 4. மலச்சிக்கல் / வயிறு கட்டுதல்



அறிகுறிகள் :

1) சாணம் வெளியேற்ற முடியாமல் கட்டிப்பட்டு இருத்தல்

2) வெளியேறும் சாணம் சிறிது ஈரத்தன்மை இல்லாமல் கட்டியாக இருத்தல் .

காரணங்கள் :

மாடுகளுக்கு ஏற்படும் காய்ச்சல், வெயில் காலத்தில் அதிக உஷ்ணம் அல்லது வெக்கையில் மாடுகள் பாதிக்கப்படுதல், உஷ்ணம் காரணமாக உடலில் உள்ள நீர் அதிக அளவில் வெளியேறுவதால்.

வைத்தியம் :

1) மாடுகளுக்கு எனிமா கேனில் 5 லிட்டர் நீரில் 100 கிராம் வேப்ப இலையை கொதிக்க வைத்து பின்னர் ஆற வைக்க வேண்டும்.


இதனை ஆசனவாய் வழியாக எனிமா நீரை உள்ளே செலுத்திவிட்டு கையை வைத்து சிறிது நேரம் ஆசனவாயை அடைக்க வேண்டும். பின்னர் கையை எடுத்துவிட்டால் சாணம் வெளியேறும். சினை மாடுகளுக்கு இந்த இனிமா நீர் வைத்திய முறையை செய்யக் கூடாது.

2) விளக்கெண்ணெய் 500 மி.லி.யை மாடுகளுக்கு 1 அல்லது 2 நாட்களுக்கு கொடுக்கவேண்டும்.

3) மஞ்சள் கிழங்கை 100 கிராம் எடுத்து 1 லிட்டர் நீரில்

கொதிக்க வைத்து வடிகட்டிய கசாயத்தை ஒரு நாளைக்கு ஒரு முறையாக 1 – 3 நாட்களுக்கு மாடுகளுக்கு கொடுக்கலாம்.

### 5. குடற்புழு நீக்கத்திற்கு



அறிகுறிகள்:மாடுகள் மெலிந்து இளைத்து காணப்படும். உடலின் மேல் உள்ள ரோமம் பெரியதாக இருக்கும். துர்நாற்றத்துடன் கூடிய சாணம் வெளியேறும். சாணத்தில் ஒரு சில புழுக்கள் உயிருடன் காணப்படும்.

காரணங்கள் :

மாடுகளுக்கு அதிக பாதிப்பு ஏற்படுத்தும் நாக்குப்பூச்சி, உருண்டைப் புழு, நாடாப் புழு, கொக்கிப்புழு, ஈரல் பாதிக்கும் தட்டைப் புழுக்களால் உண்டாகிறது.

வைத்தியம்:

தேவையான மூலிகை பொருட்கள்

நொச்சி இலை 1 கிலோ, சோற்றுக்கற்றாழை மடல்கள் 1 கிலோ, வேப்பங்கொட்டை விதை 1 கிலோ, சங்கங்குப்பி இலை 1 கிலோ, எருக்கு இலை 1 கிலோ மேலே கூறிய அனைத்து மூலிகைகளையும் தண்ணீர் சிறிது தெளித்து தனித்தனியே அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் இவைகளை ஒன்று சேர்த்த மூலிகைக் கலவையை நன்கு வடிகட்டி ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். வளர்ந்த மாடுகளுக்கு 50 மி.லி வாய் மூலம் வழங்கலாம். மேற்கூறிய முறையில் தயாரிக்கப்பட்ட குடற்புழு நீக்க திரவ மருந்தை ஒரு மாதம் வரை சேமித்து வைத்து பயன்படுத்தலாம். இந்த குடற்புழு நீக்க மருந்து வழங்கப்படும் போது சாணம் திரவமாக போடுவது மாறி கட்டியாக சாணம் வெளியேறும்; துர்நாற்றமும் மாறி நல்ல முறையில் சாணம் வெளியேறும்.

மேலும் மாடுகள் நன்றாக மேய்ச்சல் எடுக்கும் திறன் அதிகரிக்க உதவும். மேய்ச்சல் அதிகமாக எடுப்பதாலும், சாணம் கெட்டியாக மாறுவதாலும் மாடுகள் மீண்டும் சுறுசுறுப்பான ஆரோக்கியமான நிலைக்கு திரும்பும்.

### 6. வெளிப்புற ஒட்டுண்ணிகள் (ஒட்டுண்ணி, பேன்கள், செல்கள்)



அறிகுறிகள் :

மாடுகள் இரத்த சோகை பாதிப்பால் மிகவும் மெலிந்து இளைத்து காணப்படும். பாதிக்கப்பட்ட மாடுகள் மிகவும் சோர்வுடன் காணப்படும். அதிக பாதிப்பு உள்ளவை இறந்து விடும். மாடுகளின் தோல் பகுதியில் ரோமத்திற்குள் மறைந்து கொண்டு அதிக எண்ணிக்கையில் ஒட்டுண்ணிகள் காணப்படும். குளம்புகளுக்குள்,காது மடலுக்குள் மற்ற உடல் பகுதிகள் அனைத்திலும் நேரடியாக ஒட்டுண்ணிகளை பார்க்கலாம்.

வைத்தியம் :

1) வெள்ளைப்பூண்டு, துளசி, வேப்பிலை, மஞ்சள் பொடி, சீதாப்பழ விதைகள் ஒவ்வொன்றும் 10 முதல் 20 கிராம் அளவுக்கு எடுத்துக் கொண்டு நன்றாக அரைத்த கலவையை 250 மி.லி வேப்பெண்ணெய் சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். இந்த மூலிகை கலந்த வேப்பெண்ணெயினை பெரிய மாடுகளுக்கு மேற்புறத்தோல் பகுதியில் தேய்த்து பூசவும்.

அல்லது

2) c© Â ¢broÆ d (Lantana Camara) பறித்து சிறு துண்டுகளாக நறுக்கி அதனை இடித்து அதில் தேவையான அளவு பசு மாட்டின் கோமியம் சேர்த்து கலக்கி 3 நாட்கள் ஊறவைக்க வேண்டும். இந்த கலவையை வைத்துக் கொண்டு தொடர்ச்சியாக 3

நாட்களுக்கு பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு வெளிப்புறம் பூசி விடவும். புகையிலை இலை, தண்டு பகுதியை 250 கிராம் அளவு 2 லிட்டர் அளவு நீரில் நன்றாக கொதிக்க வைக்கவும். இந்த திரவத்தில் 5 லிட்டர் நீர் சேர்த்து தெளிப்பான் உதவியுடன் 10 முதல் 20 மாடுகளுக்கு வெளிப்புறமாக தெளிக்க வேண்டும்.

அல்லது

3)கந்தகத்தூள் (சல்பர்) 10 கிராம் எடுத்து தூளாக வைத்துக்கொள்ள வேண்டும். 10 கற்பூரவில்லையை அரைத்து தனியாக வைத்து கொள்ள வேண்டும். வேப்பஎண்ணெய் அல்லது புங்க எண்ணெய் 100 மி.லி யில் மேற்கண்ட பொருட்களை கலந்து மாடுகளுக்கு வெளிப்புறத்தில் தடவிவிட வேண்டும். பின்னர் 2 நாட்கள் கழித்து ஒட்டுண்ணிகள் இறந்தவுடன் குளிப்பாட்டலாம்.

**7. சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள்**



1) மூச்சு வெளியேறும் போது குறட்டை சத்தம் கேட்கும்.

2) மூச்சு விடுவதற்கு சிரமப்படும்.

வைத்தியம் :

1) துளசி இலை 100 கிராம் மற்றும் ஆடாதொடை இலை 100 கிராம், இஞ்சி 50 கிராம், மிளகு 10 கிராம், வெல்லம் 100 கிராம் ஆகிய அனைத்தையும் 1 லிட்டர் நீரில் கொதிக்க வைத்து ஆறவைத்து 100 மி.லி முதல் 250 மி.லி அளவு தேவைக்கு ஏற்பவும் எடைக்கு தகுந்த படி மேற்குறிய மூலிகை திரவத்தை தினசரி 2 அல்லது 3 முறை வழங்கலாம்.

அல்லது

2) கண்டங்கத்திரி பழம் சிறிதளவு (6 முதல் 8), மிளகாய்ப்பழம் 3, சுண்ணாம்புத்தூள் 5 கிராம் சேர்த்து அரைத்து 500 மி.லி சுடுநீரில் கலந்து 20 நிமிடங்கள் வைக்கவும். இதனை வடிகட்டி ஆட்டுக்கு 250 மி.லி , மாட்டுக்கு 500 மி.லி உள்ளே தரவும். ஒரு நாளைக்கு 1 வேளை, 2–3 நாட்கள் தர வேண்டும்.

அல்லது

3) மூக்கில் ஈ முட்டை இடுவதால் வரும் மூக்கடைப்பானுக்கு கண்டங்கத்திரி பழம் சிறிதளவு (4 முதல் 6) இவைகளை நசுக்கி ஆட்டு சிறுநீரில் அல்லது பசு மாட்டின் கோமியத்தில் இரவு முழுவதும் அதனை ஊற வைத்து பின்னர் வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். மேற்கூறிய வடிகட்டிய திரவத்தை ஒரு சில துளிகள் மட்டும் பாதிப்புள்ள மாடுகளுக்கு மூக்கில் உள்ளே விடவும்.

**8. காய்ச்சல்**

அறிகுறிகள் :

1) கால்கள் மற்றும் உடம்பில் நடுக்கம் ஏற்படுதல்

2) ரோமம் குத்திட்டு மேல் நோக்கி இருத்தல்

3) கண்களில் நீர் சொரிதல்

4) பாதிக்கப்பட்ட மாடு படுத்தே இருத்தல்

5) தீவனம் அல்லது தண்ணீர் அருந்தாமல் இருத்தல்

6) பால் உற்பத்தியில் குறைவு ஏற்படுதல்

வைத்தியம் :

1) மண் சட்டியில் அடுப்புக்கரி அல்லது காய்ந்த விறகு உதவியுடன் தீக்கங்கினை உண்டாக்கி தீக்கங்கில் வேப்பங்கொட்டை விதைகள் 100 கிராம் (வேப்பங்கொட்டை தோலையும் போடலாம்). இதில் தும்பை, வேப்பஇலை, முடக்கத்தான் இலையும் சேர்க்கலாம். இதிலிருந்து வரும் புகையை மாடுகளின் தலை முன்பு படுமாறு வைக்கவும். பாதிக்கப்பட்ட மாடு மேற்கூறிய புகையினை நன்கு சுவாசிக்கும் படி செய்தல் வேண்டும்.

அல்லது

2) ஓமம், கஸ்தூரிமஞ்சள், வெள்ளைப்பூண்டு, மிளகு இவை நான்கினையும் ஒவ்வொன்றும் 5 கிராம் அளவுக்கு எடுத்துக் கொண்டு அதனை தூள் செய்து சுடு நீரில் கலந்து கரைத்து தேவைக்கு ஏற்ப வாய் மூலம் உள்ளே ஒரு நாளைக்கு 2 முறை கொடுக்கவும்.

அல்லது

3) அரிசி அல்லது கம்பு குருணையாக செய்து 500 கிராம் அளவு நீரில் கலந்து கொதிக்க வைத்து ஆறியவுடன் மாடுகளுக்கு வழங்கலாம்.

அல்லது
4) குடிநீர் வழங்கப்படும் போது நன்றாக கொதிக்க வைத்து ஆறிய குடிநீரை மட்டும் கொடுக்கவும்
அல்லது
5) பச்சைப்புல், பச்சை தீவனத்தட்டை தீவனமாக கொடுப்பதை தவிர்த்து காய்ந்த தட்டை அல்லது வைக்கோல் கொடுக்கலாம்.

**9. கோமாரி நோய்** (கால்காணை வாய்காணை)



அறிகுறிகள் :
பாதிக்கப்பட்ட மாடுகளில் வாயில் உமிழ்நீர் வெளிவரும். வாய்ப்பகுதியில் புண்கள் காணப்படும். கால் குளம்புகளின் இடைவெளியில் சீழ் பிடித்த புண்கள் தெரியும். பாதிக்கப்பட்ட மாடுகள் நடப்பதற்கு மிகவும் சிரமப்படும்.

வைத்தியம் :
தேவையான பொருட்கள் மற்றும் அளவுகள்
1) புதிதாக அறுவடை செய்யப்பட்ட மஞ்சள் கிழங்கு 200 கிராம்
2) ஒரு தேங்காயில் எடுக்கப்பட்ட தேங்காய் துருவல்
3) சோற்றுக்கற்றாழை மடல் – 200 கிராம்
4) வெல்லம் – 200 கிராம்
5) சமையல் உப்பு – 100 கிராம்
6) வெள்ளைப் பூண்டு – 100 கிராம்
7) மிளகு – 50 கிராம்
8) சீரகம் – 50 கிராம்
9) வெந்தயம் – 50 கிராம்

கிரைண்டர் அல்லது மிக்ஸி உதவியுடன் தேங்காய் துருவல், சோற்றுக்கற்றாழை, மஞ்சள் கிழங்கு, வெள்ளைப்பூண்டு ஆகியவற்றை நன்றாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். தேவையான நீர் கலந்து அரைத்து அதனை சுத்தமான பாத்திரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். மிளகு, சீரகம், வெந்தயம் ஆகியவற்றை தூள் செய்து தூள் செய்த வெல்லத்துடன் மேற்கூறிய மூலிகை மருந்து கலவையில் சேர்க்க வேண்டும். இதில் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து 1 லிட்டர் அளவு வரும் வரை வைத்துக்கொள்ள வேண்டும். இதனை வடிகட்டி எடுக்கப்பட்ட மூலிகை திரவத்தை வாய் மூலம் மாடுகளுக்கு உள்ளே கொடுக்க வேண்டும்.

மருந்து கொடுக்கும் அளவு
1) பெரிய மாடுகளுக்கு 100 மி.லி.
2) கன்றுகளுக்கு 50 மி.லி என்ற அளவு கொடுக்க வேண்டும்.
3) மூலிகை திரவ மருந்து பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு கொடுப்பதற்கு முன் 2 வாழைப்பழத்தை 50 மி.லி நல்லெண்ணெயில் தோய்த்து வாய் மூலம் கொடுக்கவும். இதனை 2 வேளைகள் 2–3 நாட்களுக்கு கொடுத்து வரலாம்.

கால் குளம்பு பகுதியில் உள்ள புண்களுக்கு தைலம் தயாரிக்கும் முறை:
முதல்முறை தேவையான பொருட்கள் :
(1) நல்லெண்ணெய் – 1 லிட்டர்
(2) மஞ்சள்கிழங்கு புதிதாக அறுவடை செய்யப்பட்டது– 100 கிராம் அல்லது மஞ்சள் பொடி – 50 கிராம்
(3) வெள்ளைப்பூண்டு – 50 கிராம்
(4) வேப்ப இலை – 10 கிராம்
(5) மருதாணி செடி இலை – 10 கிராம்
(6) குப்பைமேனி இலை – 10 கிராம்

மூலிகை இலைகள், மஞ்சள், வெள்ளைப்பூண்டு ஆகியவற்றை நன்றாக அரைத்து கலந்து கொள்ளவும். இவற்றை நல்லெண்ணெய்யுடன் கலந்து மூலிகை கலந்த எண்ணெயை நன்கு கொதிக்க வைக்கவும். கொதிக்க வைத்த மூலிகை எண்ணெயை ஆற வைத்து வடிகட்டி ஒரு பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொள்ளவும்.

மேற்கூறிய மூலிகை தைல எண்ணெய் தினசரி புண் பாதித்த குளம்புகள் மீது பூசவும் தேவைக்கு ஏற்ப தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு அல்லது குளம்பு புண் நன்றாக ஆறி சரியாகும் வரை பூசலாம்.

இரண்டாவது முறை : தேங்காய் எண்ணெய் 500 மி.லி யுடன் ஊமத்தை இலைச்சாறு 500 மி.லி சேர்த்து இந்த கலவையை ஒரு பாத்திரத்தில் எண்ணெய் பதம் வரும்

வரை சுமார் ஒரு மணி நேரம் கொதிக்கவிட வேண்டும். பின்னர் அடுப்பை அனைத்து விட்டு இந்த எண்ணெய் பதத்தில் உள்ள திரவத்தில் 5 கிராம் அளவு மயில் துத்தம் கலந்து நன்றாக கலக்க வேண்டும். இந்த தைலத்தை சுத்தமான கண்ணாடி பாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு தேவைப்படும் போது பயன்படுத்தலாம்.

கோமாரி நோய் கால் குளம்பு புண்ணுக்கு மட்டும் அல்லாமல் மற்ற வகை புண்களுக்கு ஈ முட்டையிட்டதால் வந்த புழு வைத்த புண்களுக்கும் இந்த தைலத்தைப் பயன்படுத்தலாம்.

நோய் பாதித்த கால்நடைகளுக்கு அரிசி, கோதுமை, கம்பு, கேழ்வரகு குருணைகளை கொதிக்க வைத்து ஆற வைத்து கஞ்சியாக தினமும் 100 கிராம் முதல் 200 கிராம் குடிநீர் கலந்து தானே குடிப்பதற்கு கொடுக்கலாம்.

**10.பால் கறவை மாடுகளில் மடி நோய்**



அறிகுறிகள் :

பாதிக்கப்பட்ட பால் மடி பெரிதாக வீக்கத்துடன் இருத்தல், மடியைத் தொட்டுப் பார்த்தால் மிகவும் சூடாக இருத்தல், பால் நிறம் திரிந்து நூல் போலும் சீழ் போன்ற அடர்த்தியுடன் இருத்தல்.

காரணங்கள்:

தொற்றும் நோய் கிருமிகள்

வைத்தியம்:

தேவையான மூலிகை பொருட்கள்

1) சோற்றுக்கற்றாழை 2 அல்லது 3 மடல்கள்

2) மஞ்சள் பொடி – 50 கிராம்

3) சுண்ணாம்புக்கல் / தூள் – 10 கிராம்

சோற்றுக்கற்றாழையை மிக்சியில் அரைத்து இத்துடன் மஞ்சள் தூள், சுண்ணாம்புத்தூள் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். பால் கறந்தபின் மடியை வெந்நீரால் கழுவி இந்த களிம்பினை தேவைக்கு ஏற்ப ஒரு நாளைக்கு 3 வேளையும் பாதித்த மடியின் மேல் பூச வேண்டும். வியாதியின் தன்மைக்கு ஏற்ப 3 முதல் 7 நாட்கள் வரை இந்த களிம்பினை பாதிக்கப்பட்ட மடி மீது பூசலாம். மேலும் வாய் மூலம் கீழ்கண்ட மருந்தினை தயார் செய்து வழங்கலாம்.

நான்கு எலுமிச்சை பழங்களை பிழிந்து கிடைத்த சாற்றுடன் 50 கிராம் சமையல் சோடா சேர்த்து 200 மி.லி குடிநீர் சேர்த்து இந்த சாற்றினை பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு வாய் மூலம் உள்ளே கொடுக்கலாம்.

**11. சினை தங்காமை / பருவ அறிகுறி தோன்றாமை / கருச்சிதைவு நோய்கள்**

அறிகுறிகள்:

பசுக்கள் பருவத்திற்கு வராமல் இருக்கும், பருவத்திற்கு வந்தாலும் பருவ அறிகுறிகள் வெளியே தெரியாமல் இருத்தல், பலமுறை தொடர் இனவிருத்தி செய்தும் கருப்பிடிக்காமல் இருத்தல், சினை தங்காமல் கருச்சிதைவு ஏற்படுதல்.


வைத்தியம்:

1) சோற்றுக்கற்றாழை மடல் முள் நீக்கி 1 அல்லது 2 மடல்கள் தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு காலையில் வெறும் வயிற்றில் மாடுகளுக்கு கொடுக்க வேண்டும். 15 நாட்களுக்குத் தொடர்ச்சியாக 200 கிராம் அளவு முளைகட்டிய கொண்டைக்கடலை அல்லது முளை கட்டிய கோதுமை விதைகள் அல்லது முளை கட்டிய கம்பு வாய் மூலம் உள்ளே கொடுக்க வேண்டும்.

2) இவ்வாறு வைத்தியம் செய்து வரும் சமயம் மாடு முடையடிக்கும். அதாவது பருவத்திற்கு வரும். இச்சமயத்தில் வாய் வழியே 150 மி.லி வேப்ப எண்ணெய் உள்ளே கொடுக்க வேண்டும். பருவ அறிகுறிகள் தோன்றிய பின் 24 மணி நேரத்தில் செயற்கை முறை இனவிருத்தி அல்லது பொலி காளையுடன் சேர்க்க வேண்டும்.

3) செயற்கை முறை இன விருத்தி அல்லது இயற்கை முறை பொலி காளையுடன் சேர்த்த பின்பு 2 கைபிடி அளவு கருவேப்பிலை இலைகள் தினசரி 7 நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.

**12. இளங்கொடி விழாதிருத்தல்**



அறிகுறிகள் :

கன்று பிறந்த பின்னர் 3 முதல் 5 மணி நேரத்திற்குப்பிறகும் நஞ்சுக்கொடி விழாமலிருத்தல்.

வைத்தியம்:

1) 2 எள் செடியின் இலைகள் சுமார் 250 கிராம் அளவு அரைத்து ஒரு லிட்டர் நீரில் கலந்து பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு வாய் மூலம் உள்ளே கொடுக்கலாம். அல்லது வெண்டைக்காய் 1/2 கிலோ தின்னக் கொடுக்கலாம்.

அல்லது

2) 100 கிராம் அளவு எள் விதையினை 100 கிராம் வெல்லத்தை சேர்த்து இடித்து உருண்டையாக வாய் மூலம் கொடுக்கலாம்.

அல்லது

3) யானை நெருஞ்சி செடி 200 கிராம் அளவு எடுத்து நறுக்கி ஒரு லிட்டர் நீரில் சில நிமிடங்கள் ஊற வைத்து கலக்கினால் சோப்பு போன்ற நுரையுடன் கூடிய திரவம் கிடைக்கும். இந்த திரவத்தை பாதிக்கப்பட்ட மாட்டுக்கு வாய்க்குள் புகட்ட வேண்டும்.

## 13.கர்ப்பப்பை வெளித்தள்ளுதல்

அறிகுறிகள் :



கன்று பிறப்புக்கு முன்னர் அல்லது கன்று பிறந்த பின்னர் கர்ப்பப்பை வெளித்தள்ளுதல்.

வைத்தியம்:

வெளித்தள்ளப்பட்ட கர்ப்பப்பையின் வெளிப்புறத்தில் சீனி சேர்க்கப்பட்ட நீரை பயன்படுத்தியோ அல்லது கிருமி நாசினி திரவம் (பொட்டாஷியம் பெர்மாங்கனேட்) பயன்படுத்தி சுத்தம் செய்தல் வேண்டும். வெளியேற்றப்பட்டுள்ள கர்ப்பப்பை பகுதியின் கீழ் ஒரு பெரிய வாழை இலையைக் கொண்டு இரண்டு கைகளால் தாங்கி பிடிக்க வேண்டும். (கர்ப்பப்பை பகுதியை கையாளும் போது மிகவும் கவனத்துடனும் நகம் படாமலும், கிழிபடுதல் அல்லது புண் ஏற்படாமலும் செயல்பட வேண்டும். கர்ப்பப்பை பகுதியை தொடுவதற்கு முன் இரண்டு கைகளையும் கிருமி நாசினி உபயோகித்து சுத்தமாக இருத்தல் வேண்டும்).

பெருவாரியான சமயங்களில் கர்பப்பை வெளித்தள்ளப்பட்ட பின் சிறுநீர் வெளியேறாமல் சிறுநீர் பை முழுவதும் சிறுநீரால் நிறைந்து காணப்படும். வாழை இலையைப் பயன்படுத்தி கர்ப்பப்பை பகுதியை உயர்த்தி பிடிக்கும் போது சிறுநீர் முழுவதும் வெளியேறும். சிறுநீர் முழுவதும் வெளியேறிய பின் வெளியேற்றப்பட்ட கர்ப்பப்பை பகுதியை மீண்டும் பழைய நிலைக்கு உள்ளே தள்ளினால் எளிதாகச் செல்லும்.

1) 2 கைபிடி அளவு தொட்டாற்சிணுங்கிச் செடியின் இலைகளை அரைத்து 200 மி.லி வெள்ளாட்டுப் பாலில் கலந்து காலை, மாலை மறுநாள் காலை என்று 3 முறை வாய் மூலம் கொடுக்கவும்.

2) கர்ப்பப்பை வெளித்தள்ளுதல் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு சினை மாடுகள் அல்லது கன்று ஈன்ற மாடுகள் முன் பகுதி தாழ்வாகவும் பின் பகுதி உயர்ந்தும் இருக்கும் வகையில் நிற்கும்படி பார்த்துக் கொள்ளவும். அதாவது தலைப்பகுதி தாழ்வாகவும் பின் பகுதி உயர்ந்து நிற்கும்படி ஒரு சரிவான தரையை தயார் செய்து பயன்படுத்தலாம்.

3) அதிகப்படியான தீவனத்தை ஒரே தடவை கொடுக்காமல் பிரித்து பலதடவைகளில் அளிக்க வேண்டும்.

## 14. நீல நாக்கு நோய்

அறிகுறிகள்:



வாய் பகுதியில் சீழ் பிடித்த புண், வாயிலிருந்து உமிழ்நீர் ஒழுகுதல், பாதிக்கப்பட்ட மாடுகள் நொண்டி நொண்டி நடப்பது, நடக்க இயலாமல் சில நேரம் படுத்துக் கொள்ளும், பாதிக்கப்பட்ட மாடுகளை எழுப்பிவிட முயலும் போது மாடுத் தோலில் உள்ள ரோமங்கள் உடலில் இருந்து கீழே விழுந்து விடுதல், தீவனம் எதுவும் தின்னாமல் இருக்கும். ஆனால் சிறிய அளவு தண்ணீர் மட்டும் குடிக்கும்.

நோயின் தீவிரம் அதிகரிக்கும் போது நோய் பாதித்த 15 நாட்களில் மாடுகள் இறந்து விடும். 'வைரஸ்' நுண்கிருமியினால் இந்த நோய் உண்டாகிறது. கொசுக்களும் ஈக்களும் இந்த நோய் கிருமியைப் பரப்பும் காரணிகளாக செயல்படுகிறது.

வைத்தியம் :

பாதிக்கப்பட்ட மாடுகள் தீவனம் எடுக்காமல் இருப்பதால் பட்டினியால் இறப்பு ஏற்படும். இதற்கு பூவன் வாழைப்பழத்தை நல்லெண்ணெயில் கலந்து ஒரு மாடிற்கு ஒரு பழம் தர வேண்டும். 20 மாடுகளுக்கு சுமார் 1/2 லிட்டர் நல்லெண்ணெய் மற்றும் 20 வாழைப்பழம் தேவைப்படும். மேற்கூறிய வைத்தியத்தால் சிறிது சிறிதாக பாதிக்கப்பட்ட மாடுகள் நோய் பாதிப்பில் இருந்து மீண்டு வரும். இருப்பினும் இந்த சிகிச்சை நோயின் தீவிரத்தை குறைக்க உதவாது. எனவே தொடர் சிகிச்சையாக சோற்றுக்கற்றாழை (முள் தோல் நீக்கப்பட்டு) நொங்குப் பகுதியை சுமார் 100 கிராம் தினசரி வாய் வழியே உள்ள புகட்ட வேண்டும். மாடுகள் நோயின் பாதிப்பிலிருந்து மீண்டு வரும் வரை (தொடர்ந்து 3–4 நாட்கள்) சோற்றுக்கற்றாழை மடல் தினசரி வாய் மூலம் கொடுத்து வர வேண்டும். சோற்றுக்கற்றாழையை தொடர்ச்சியாக மாடுகளுக்கு கொடுத்து வரும் சமயம் அதன் உடல் எடை அதிகரிக்கும். மாடுகளின் வயிற்றில் உள்ள புழுக்கள் நீங்கும். குடற்புழு மருந்தாக சோற்றுக்கற்றாழை செயல்படும்.

மேற்கூறிய காரணத்தால் மழைக்காலங்களில் மாடுகளுக்கு நோய் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக நோய் தவிர்ப்பு வைத்தியமாக ஒவ்வொரு மாத இடைவெளியில் வாய் வழியே சோற்றுக்கற்றாழை மடலை கொடுக்க வேண்டும்.

### 15. விஷக்கடி அல்லது விஷமுள்ள தீவனம் உண்ட பாதிப்பு



வைத்தியம் :

1. வெற்றிலை, துளசி, மிளகு, சுக்கு ஆகியவை ஒவ்வொன்றும் 10 கிராம் அளவு எடுத்துக் கொண்டு அதனை இடித்த கலவையுடன் வெது வெதுப்பான நீரில் கலந்து வாய் வழியே உள்ளே கொடுக்க வேண்டும்.

அல்லது

2. அடுப்புக்கரி 100 கிராம் எடுத்து 1 லிட்டர் பாலில் கலக்க வேண்டும். இத்துடன் 1 லிட்டர் நீர் சேர்த்து உள்ளே புகட்டவும். ஒரு நாளைக்கு ஒரு தடவை 2 நாட்கள் தரவும்.

### 16. புண்கள்

வைத்தியம் :

புண்களுக்கு மூலிகைத் தைலத்தை கீழ்கண்ட முறையில் தயார் செய்து புண் பகுதிக்கு மேல் பூச வேண்டும்.

மூலிகை தைலம் செய்முறை:

தேங்காய் எண்ணெய் 250 மி.லியுடன் ஊமத்தை இலை பிழிந்த சாறு 250 மி.லி ஒன்று சேர்த்து இந்த கலவையை ஒரு பாத்திரத்தில் நன்றாக கொதிக்க வைக்கவும். ஒரு மணி நேரம் கொதிக்க வைக்கும் போது எண்ணெய் பதத்தில் திரவம் கிடைக்கும். பின்னர் அடுப்பை அணைத்து விட்டு மயில் துத்தம் 2½ கிராம் அளவு சேர்த்து நன்கு கரையும் வரை கலக்கவும்.

இந்த மூலிகைத் தைலத்தை ஒரு கண்ணாடி பாட்டிலில் சேமித்து எல்லா வித புண் பாதிப்புகளுக்கும் புழு வைத்த புண்களுக்கும் பூசி வரலாம்.

அல்லது

மாடுகளுக்கு வரும் வாய்ப்புண்ணிற்கு பன்றிக் கொழுப்பு 100 மி.லியுடன் கஸ்தூரி மஞ்சள் 10 கிராம் கலந்து பூச வேண்டும்.

### 17. கன்றுகளின் கழிச்சல் நோய்

காரணம் :

பசு மற்றும் எருமைக் கன்றுகளை பாக்டீரியா நுண் கிருமி தாக்குவதால் கன்று கழிச்சல் நோய் ஏற்படும் .

அறிகுறிகள் :

துர்நாற்றத்துடன் கூடிய கழிச்சல் தெரியும்; காய்ச்சல் இருக்கும்; கன்றுகள் சோர்வுடன் செயலற்று நின்று கொண்டிருக்கும்; பார்வை இயல்பாக இல்லாமல் கண்கள் நோய் அறிகுறியுடன் தெரியும். உஷ்ணமானி

கொண்டு சோதித்தால் 104 டிகிரி பாரன்ஹீட் உஷ்ணநிலையில் காய்ச்சல் இருக்கும்.

வைத்தியம் :

கொய்யாக்கொழுந்து இலை 200 கிராம், சுக்கு 50 கிராம் சேர்த்து இடித்து உருண்டை பிடித்து ஒரு நாளைக்கு ஒரு முறை இரண்டு நாட்கள் வாய் வழியாக உள்ளே புகட்ட வேண்டும்.

**18. கால்நடைகளின் ஆரோக்கியத்திற்கு பயன்படும் பஞ்சகவ்யா**

பஞ்சகவ்யாவை கால்நடைகளுக்கு கொடுத்து வந்தால் மாடுகளுக்கு சினை தங்காமை, மீண்டும் மீண்டும் சினைப்படுத்தியும் கருதங்காமை போன்ற பாதிப்புகள் ஏற்படாது.

செய்முறை :

பசுவிலிருந்து கிடைக்கும் 5 பொருட்கள் (சாணம், சிறுநீர், பால், தயிர், நெய்) கொண்டு தயாரிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | பசுவின் சாணம் | – 1 கிலோ |
| 2) | பசுவின் கோமியம் | – 1 லிட்டர் |
| 3) | பசுவின் பால் | – 1 லிட்டர் |
| 4) | பசுவின் தயிர் | – 1 லிட்டர் |
| 5) | பசு நெய் | – 100 கிராம் |

மேற்கூறிய 5 பொருட்களுடன் 2 வாழைப்பழம், வெல்லம் 500 கிராம் ஆகியவற்றை சேர்த்து ஒரு பிளாஸ்டிக் வாளியில் கலக்கி விடவும். மேற்கூறிய கலவை நன்றாக நொதித்துப்போகும் அளவுக்கு ஒரு வாரம் வரை வைத்திருக்கவும் (பிளாஸ்டிக் வாளியினை துணியால் மூடி வைக்க வேண்டும்).

வைத்திய செய்முறை :

பசுக்களை ஆரோக்கியமாக பராமரிக்க மாதம் ஒரு முறை 300 மி.லி பஞ்சகவ்யா வாய் வழியே கொடுக்கலாம்.

**19. பால் காய்ச்சல் நோய்**

காரணம் :

இந்த நோய் அதிக பால் கறக்கும் மாடுகளை மட்டும் பாதிக்கிறது. குறிப்பாக கன்று ஈன்ற 48 மணி நேரத்தில் இரத்தத்தில் உள்ள கால்சியம் எனப்படும் சுண்ணாம்புச்சத்து மிகவும் குறைந்து விடுவதால் ஏற்படுகிறது.

வைத்தியம் :

ஒரு சுத்தமான மண் சட்டியில் 1 கிலோ சுண்ணாம்புக்கல் (கால்சியம் ஹைட்ராக்சைடை) எடுத்துக் கொண்டு அதில் நீர் 10 லிட்டர் அளவு சேர்த்து கரைக்கவும். இந்த கலவை நீரை ஓர் இரவு முழுவதும் அப்படியே வைக்கவும். மறுநாள் காலை இந்த மண் பாத்திரத்திலிருந்து 500 மி.லி அளவு தெளிந்த சுண்ணாம்பு நீரை எடுத்து குடிநீர் தொட்டியில் சேர்த்து குடிக்க விட வேண்டும். இதனை தினமும் கடைப்பிடித்து வர வேண்டும். தினமும் நீர் 500 மி.லி. கலவையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இம்முறையில் தயார் செய்யப்பட்டுள்ள சுண்ணாம்பு தெளிந்த நீரை 20 நாட்களுக்கு மேற்கூறிய முறையில் பயன்படுத்திய பின் தொட்டியை சுத்தம் செய்து மீண்டும் புதிதாக சுண்ணாம்புக்கல் பயன்படுத்தி புதிதாக தயாரிக்க வேண்டும். இந்த முறையில் சுண்ணாம்பு சத்து மாடுகளுக்கு வழங்கும் போது நோய் தவிர்க்கப்படும்.

அல்லது

நாட்டுக்கோழி முட்டை – 2, முருங்கை இலை – நான்கு கைப்பிடி அளவு, பிரண்டை – இரண்டு கைப்பிடி அளவு, வெல்லம் – ஒரு துண்டு (50 கிராம்). முருங்கை இலை மற்றும் பிரண்டை இரண்டையும் தனித்தனியாக அரைத்து, வெல்லத்தை சேர்த்து இரண்டையும் குழைத்துக் கொள்ள வேண்டும். இக்கலவையை ஒரு நாளிற்கு ஒரு முறை வீதம் மூன்று நாட்கள் கொடுக்க வேண்டும். இம்முறைக்கு உடனடியாக பலன் கிடைக்கும்.

**20. எலும்பு முறிவு**



காரணங்கள்:

கீழே விழுவதால், அதிக பாரம் ஏற்றிச் செல்வதாலும், விபத்தினாலும் எலும்பு முறிவு ஏற்படும்.

வைத்தியம் :

உளுந்து 100 கிராம் தூள் செய்து சலித்து 3 கோழி

முட்டை வெள்ளைக்கரு சேர்த்து பசையாக்கி ஒரு நீண்ட வெள்ளைத் துணியில் பசையை தடவி வைக்கவேண்டும். பின்பு எலும்பு முறிவு ஏற்பட்டதை சரியாகப் பொருத்தி வைத்து உளுந்தம்பசை தடவப்பட்ட துணியால் சுற்ற வேண்டும். அதன் மேல் மூங்கில் தப்பைகளை நான்கு பக்கங்களிலும் வைத்து அதற்கு மேல் பசை தடவிய துணியால் சுற்றி கட்டி விடவேண்டும். மூன்று தினங்களுக்கு ஒருமுறை கட்டை கழற்றிவிட்டுப் பின்பு புதுக்கட்டுப் போட வேண்டும். மூன்று கட்டுப் போட்டுவிட்டு நான்காவது கட்டு 15 அல்லது 20 நாள் வரை கட்டை அவிழ்க்காமல் விட்டுவிட வேண்டும். 20 நாட்களில் முறிந்த எலும்பு நன்றாகக் கூடிவிடும். பின்பு கட்டை அவிழ்த்து விடலாம். பின்பு சில நாட்களுக்கு கட்டு இருந்த பகுதியில் தேங்காய் எண்ணெய் விட வேண்டும்.

## 21. பால் அதிகம் கறக்க

பால் குறைய காரணங்கள் :

வளர்ச்சி குறைவு, பால் மடி இறுக்கம், சினைப் பருவத்தில் கடைசி 60 நாட்கள் தொடர்ந்து விடாமல் பால் கறப்பது, சினை பருவத்தில் கடைசி 80 நாட்கள் போதிய அளவு அடர் தீவனம் இல்லாதிருப்பது, மாடு பலவீனமாக இருப்பது, உடலில் தாது உப்புகள், வைட்டமின் குறைவு, மாசி விழாமல் அடிதள்ளுதல், சுண்ணாம்பு சத்து குறைவு, காணை நோயால் பாதிப்படைதல், செரிமான நோய்களால் பாதிப்படைதல், கொம்பு அறுத்தல், சுடுதல் போன்றவற்றால் பால் குறைகிறது.

வைத்தியம் :

பால் அதிகம் கறக்க சுரைக்காய் 1 கிலோவுடன் வெந்தயம் 100 கிராம், தேங்காய் 1, ஊற வைத்த உளுந்தம் பருப்பு 200 கிராம், பனை வெல்லம் 300 கிராம் ஆகியவற்றை நன்கு அரைத்து தினம் ஒரு வேளை வீதம் 5 நாட்களுக்கு கொடுத்து வந்தால் பாலின் அளவு அதிகரிக்கும்.

## 22. சினைமாட்டின்மடியில் நீர்கோர்த்தல்

நோய் அறிகுறிகள்:

பால் மாட்டின் மடிக்காமல் நீர் கோர்த்துக் கொள்ளுதல், மற்றும் வலி.

நோய்க்காரணம்:

மடிக்காம்புகளில் வீக்கம் ஏற்பட்டிருக்கலாம். அல்லது பால் சுரப்பு குறைந்திருக்கலாம். சில நேரம் பால் கறக்கும் நேரத்தில் அமைதியின்மை ஏற்படும் பட்சத்திலும் இந்நிலை ஏற்படும்.

தேவையான பொருட்கள்:

நல்லெண்ணைய் அல்லது கடுகு எண்ணைய் – 200 மில்லி அளவு, மஞ்சள் தூள் 50 கிராம் மற்றும் மூன்று பல் பூண்டு.

மருந்து தயாரிப்பு:

எண்ணெய்யை அடுப்பிலிட்டு சூடு படுத்தவும். எண்ணெய் சூடாகும்போதே, மஞ்சள் தூளை சேர்க்கவும். நன்கு கலக்கி எண்ணைய் சற்று வாசனை வீசும் போது இறக்கி விடவும், எண்ணை கொதிக்க வேண்டியதில்லை.

## 23. அம்மை/ மருகு/ வெடிப்பு

நோய் அறிகுறி:

மாட்டின் உடல் முழுவதும் கொப்பளங்கள் காணப்படும். காய்ச்சல் இருக்கும். முகம் மற்றும் பால்மடிப் பகுதிகளில் கொப்பளங்கள் அதிகமாகக் காணப்படும்.

தேவையான பொருட்கள்:

பூண்டு – ஐந்து பல், மஞ்சள் பொடி – 10 கிராம், சீரகம் – 15 கிராம், திருநீற்றுப்பச்சிலை கைப்பிடியளவு, வேப்பிலை – கைப்பிடியளவு, வெண்ணெய் அல்லது நெய் – 50 கிராம்.

மருந்து தயாரிப்பு:

சீரகத்தை மட்டும் சுமார் 15 நிமிடங்கள் நீரில் ஊறவைத்த பின் இதோடு நன்கு அரைக்கவும் அரைத்த பின் வெண்ணெய் அல்லது நெய் சேர்த்து கலக்க வேண்டும்.

சிகிச்சை முறை:

முதலில் பாதிக்கப்பட்ட மேற்பகுதியை நன்கு கழுவி சுத்தம் செய்ய வேண்டும். அதன் பின் உலர்ந்த பிறகு பாதிக்கப்பட்ட பகுதி மேல் அதாவது மாடுகளின் மேல் காணப்படும் கொப்பளங்கள் மேல் நன்கு பூசவும்.

## 24. மாடுகள் எழுந்திருக்க முடியாது இருத்தல்:

**அறிகுறிகள்:**

மாடுகளால் எழுந்திருக்க முடியாது. படுத்த நிலையில் காணப்படும். முன்னங்கால்களை அசைத்துக் கொண்டே இருக்கும். இதைக் குணப்படுத்துவதற்கு கீழ் குறிப்பிட்டுள்ள இரண்டு மருத்துவ முறைகளையும், தனித்தனியே தயார் செய்து ஒரே சமயத்தில் பயன்படுத்த வேண்டும். மருத்துவ முறை – 1

தேவையான பொருட்கள்:

நாட்டுக்கோழி முட்டை – 2, முருங்கை இலை – நான்கு

கைப்பிடி அளவு, பிரண்டை – நான்கு கைப்பிடி அளவு, வெல்லம் – ஒரு துண்டு (50 கிராம்)

மருந்து தயாரிப்பு:

குறிப்பிடப்பட்ட முருங்கை இலை மற்றும் பிரண்டை இரண்டையும் தனித்தனியாக அரைத்து, வெல்லத்தை சேர்த்து இரண்டையும் குழைத்துக் கொள்ள வேண்டும்.

சிகிச்சை முறை:

இரண்டு நாட்டு கோழி முட்டைகளை உடைத்து மாட்டின் வாயில் ஊற்ற வேண்டும். ஒரு நாள் மூன்று முறை (ஆறு முட்டைகள்) கொடுக்க வேண்டும். கைப்பிடி அளவு கருவேப்பிலை, பிரண்டை, முருங்கை இலை, அகத்தி இலை, தழுதாழை எடுத்துக் கொள்ளவும். இத்துடன் 200 கிராம் தென்னம்பாளையை சேர்த்து அரைத்துக் கொள்ளவும். அரைத்து கலவையை அரை லிட்டர் தேங்காய் பாலில் கலந்து உள்ளுக்குள் கொடுக்கவும்.

மருத்துவ முறை: 2 தேவையான பொருட்கள்: கற்பூரவள்ளி இலை, துளசி இலை, மூங்கில் இலை, நொச்சி இலை, மாவிலங்க இலை, எருக்கு மொட்டு இவைகளை கைப்பிடி அளவு வீதம் எடுத்துக் கொள்ள வேண்டும். சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கருஞ்சீரகம் இவைகளை வகைக்கு – 30 கிராம், இலுப்பை பிண்ணாக்கு கால் கிலோ.

மருந்து தயாரிப்பு: மேற்கு குறிப்பிடப்பட்ட அனைத்து பொருட்களையும் சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும்.

சிகிச்சை முறை: அரைத்த விழுதை ஒரு நாள் இரண்டு முறை வீதம் 15 – நாட்கள் வரை உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

குறிப்பு: நான்கு நாட்கள் வரை பாதிக்கப்பட்ட மாட்டை எழுப்ப முயற்சித்தல் வேண்டாம்.

## உயிர்சக்தி வேளாண்மை பஞ்சாங்கம் 2025

இது நமது பாரம்பரிய பஞ்சாங்கம் கணிப்பதிலிருந்து சிறிது மாறுபட்டதாகும். அவ்வப்போது கோள்களின் சரியான நிலைப்பாடு குறித்து விண்வெளி / வானிலை தகவல் மையங்களில் மூலமாக எடுக்கப்படுவதால் இதனை அறிவியல் பூர்வமாகவும் ஏற்றுக் கொள்ளலாம்.

**சந்திரனும், சனியும் பூமிக்கு எதிர் எதிராக இருக்கும் சமயம்** விதைத்தல் மற்றும் நடவு செய்தல் ; பூஞ்சாண நோயைத் தவிர்க்க கொம்பு சிலிக்கா உரம் தெளித்தல்.

**கீழ்நோக்கு நாட்களில் செய்ய வேண்டியன**

பூமிக்கு கீழே விளையும் பயிர்களின் விதைப்பு / நடவு / அறுவடை செய்தல் ; கம்போஸ்ட் தயாரிப்பு துவக்குதல் / நிலத்திற்கு குப்பை இடுதல் ; கொம்பு சாணம் உரம் தெளித்தல் ; கவாத்து செய்தல் : மரம் வெட்டுதல் ; மரக்கன்று நடுதல் ; உழவு அடித்தல் .

**மேல்நோக்கு நாட்களில் செய்ய வேண்டியன**

கொம்பு சிலிக்கா உரம் தெளித்தல் ஒட்டு கட்டுதல் பதியம் போடுதல் பூமிக்கு மேல் விளையும் பயிர் விதைப்பு , அறுவடை செய்தல், சேமித்தல், திரவ உரம் தெளித்தல்.

**பௌர்ணமி, பௌர்ணமிக்கு 48 மணி நேரம் முன்பு**

திரவ உரம் பயிருக்கு இலை வழி கொடுத்தல் , மண்ணில் திரவ மருந்து தெளித்தல் (Drenching) கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுத்தல்.

**அமாவாசையில் செய்ய வேண்டியது**

அமாவாசைக்கு 48 மணி நேரம் முன்பு விதைப்பு செய்தல். தேய்பிறையில் மரம் வெட்டுதல்.

**நட்சத்திரம் , ராசி பார்த்து விதைத்தல்**

விதைக்காக, பழத்திற்காக, வேர்க்கிழங்கிற்காக பூக்களுக்காக விதைக்கப்படும் பயிர்களை அந்தந்தக் குறிப்பிட்ட நாளில் விதைக்கப்பட வேண்டும். சந்திரன் ஒவ்வொரு ராசி மண்டலத்தையும் சுற்றிவரும் சமயம் எந்த ராசி பக்கம் வந்து கொண்டிருக்கிறதோ அந்த ராசியின் குணத்தை பூமிக்குக் கொடுக்கும். உதாரணமாக கன்னி ராசியின் பக்கம் வரும் சமயம் மண் குணத்தை காட்டுமாதலால் அதனுடன் தொடர்பு கொண்ட வேர் / கிழங்கிற்காக அறுவடை செய்யப்படும் சர்க்கரை வள்ளிக் கிழங்கை நடவு செய்யலாம். காற்று , மண், வெப்பம், நீர் தொடர்புள்ள இராசி நாட்களில் அந்தந்த குணம் கொண்ட பயிரை விதைக்கலாம்.

**பூமிக்கு அருகில் உள்ள நிலா நாள்**

விதைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

**பூமிக்கு தொலைவில் உள்ள நிலா நாள்**

விதைப்பது நல்லது

**சந்திரன் பாதையும் சூரியன் பாதையும் குறுக்கிடும் நாட்களில்** எல்லா விவசாய வேலைகளையும் தவிர்க்க வேண்டும்.

ஜெய்சன் ஜே ஜெரோம்
86, வடக்கு பூந்தோட்டம் தெரு, வடகரை
பெரியகுளம், தேனிமாவட்டம், செல் 9443358380

## நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம்

| | வருட சந்தா ரூபாய் | ஆயுள் சந்தா ரூபாய் |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள் | 200 | 2000 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 150 | 1500 |
| தனிப்பிரதி | 30 | ---- |
| 15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1500) + ( கொரியர் செலவு ரூ. 250 ) | 1500 | ---- |

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா" மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

நூல் அஞ்சல்

பெறுநர்

------------------------------------
------------------------------------
------------------------------------
------------------------------------

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in